விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram. Ria
WESTERN UNION WU
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 22 திங்கட்கிழமை (07.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 354

## மக்களின் பொறுப்பற்ற செயற்பாடே யாழ்.வெள்ளத்துக்கு காரணம்

### யாழ்.அரச அதிபர் க.மகேசன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்ட மக்கள் சமூக அக்கறையோடு செயற்படும்போது வெள்ள நிலைமையை கட்டுப் படுத்த முடியும் என யாழ. மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள் ளார்.
யாழ்ப்பாணம் மாவட் டத்தில் தற்போது ஏறபட்டுள்ள அன 19

## யாழ்., கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இன்றும் விடுமுறை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களின் பாட சாலைகளுக்கு இன்று டிசம்பர் 7ஆம் திகதி திங்கட் கிழமையும் விடுமுறை 19

## கிளிநொச்சியில் இளைஞனுக்கு கொரோனா

(முறிகண்டி)
கிளிநொச்சி, பாரதிபுரத் தைச் சேர்ந்த இருபது வயது இளைஞர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
முதலாவது தொற நாளர் அடையாளம் 19

## எதிர்வரும் புதன்கிழமை வரை

# வடக்கு மாகாணத்தில் கன மழை தொடரும்

### யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)
மன்னார் வளைகுடா பகுதியில் வலுவிழந்து தாழமுக்கமாக மாறியிருக்கும் "புரேவி" புயலினால் எதிர்வரும் புதன்கிழமை வரையில் மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் என யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் நா.பிரதீபராஜா சுட்டிக் காட்டியுள்ளார்.
மேலும் இன்று தொடக்கம் யாழ்ப் பாணம், மன்னார் மாவட்டங்களிலும் பரவலாக வட மாகாணம் முழுவ திலும் கன மழை பெய்யும்.
எனவே பொதுமக் கள் குறிப்பாக தாழ்நில 19

## புலோலியில் உயிரிழந்த முதியவருக்கு தொற்றில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ்.பருத்தித்துறை - புலோலியில் உயிரிழந்த முதியவருக்கு கொரோனா தொற்று இல்லை என யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தசத்திய மூர்த்தி தெரிவித் 19

## வவுனியாவில் நீரில் மூழ்கி மாயமான மாணவன் சடலமாக மீட்பு!



(வவுனியா)
வவுனியா பேராற்றில் காணாமல்போன மாணவனன சடலம் நேற்றுக் காலை மீடகப்பட்டுள்ளது.
கடந்த இரண்டு தினங்களுக்கு முன் 19

## யாழ்., கிளிநொச்சிக்கு சிவப்பு எச்சரிக்கை

### வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)
யாழ்ப்பாணம் மற்றும் கிளி நொச்சி மாவட்டத்தின் சில பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ள வளிமண டலவியல் திணைக் 19

## முல்லை தனிமைப்படுத்தலில் மூவருக்கு தொற்று

(குப்பிழான்)
யாழ்ப்பாணம் போதனா வைத் 19

## யாழில் நேற்றும் கடும் மழை

### பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில்நேற்று மாலை தொடக்கம் பெய்து வரும் கடும் மழை காரண மாக மீண்டும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் ஏற்கெனவே வெள்ளப் பாதிப்பை எதிர்கொள்ளாத பகுதிகளும் வெள்ளப் பாதிப் புக்கு உள்ளாகியுள்ளது.
யாழ்ப்பாணம் நகர் பகுதியில் பல விற்பனை நிலையங்களுக்குள் மீண் டும் நீர் புகுந்துள்ளது.
அதேபோல நல்லூரில் நேற்று ஏற்பட்ட வெள்ளப் பெருக்கிலும்அதிக நீர் தேங்கியிருக் 19

## நேற்றும் 3 பேர் பலி


### + 686 தொற்றாளர்கள்

(கொழும்பு)
நாட்டில் நேற்று ஞாயிற்றுக் 19

## 6 சிறைகளிலிருந்து கைதிகள் இயக்கச்சியில் தனிமைப்படுத்தப்பட்டனர்

(கொழும்பு)
தென்னிலங்கையின் ஆறு சிறைச் சாலைகளில் இருந்து கைதிகள் கிளி நொச்சி, இயக்கச்சி தனிமைப் படுத்தல் நிலையத்துக்கு 19

## நேற்று பெய்த கன மழையால் வெள்ளத்தில் மூழ்கியது யாழ்ப்பாண குடாநாடு



## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இலங்கை கடற்பரப்புக்குள்
# பிறநாட்டவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதை தடுக்க நடவடிக்கை
## பிரதமர் மகிந்த உறுதி

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்புக்குள் பிற நாட்டவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுக்க உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கலமெடிய மீன்பிடி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த பிரதமர் மேலும் கூறுகையில்,

குறுகிய காலத்தில் 379.53 மில்லியன் செலவில் கலமெடிய மீன்பிடி துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டது. இலங்கை அரசியல் வரலாற்றில் பல பிரதான கட்சிகள் ஆட்சியதிகாரம் செலுத்தியுள்ளன. ஆட்சியில் இருந்த அனைத்து அரசாங்கங்களும் கலமெடிய மீன்பிடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளன. நாட்டில் தற்போது 22 மீன்பிடி துறைமுகங்கள் உள்ளன. தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் மீன்பிடி கைத்தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. கடற்சார் கைத்தொழில்தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளது

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாக காணப்பட்டாலும் பிற நாடுகளில் இருந்து மீன் இறக்குமதி செய்யப்படுகின்றன. இதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன. இலங்கை கடற்பரப்பில் பிற நாட்டவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுப்படுகிறார்கள். இதனை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடல்வளங்களை பாதுகாக்க அரசாங்கம் சிறந்த திட்டம் வகுத்துள்ளது. விவசாயத்துறைக்கும், மீன்பிடி கைத்தொழிலுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.



மீன்பிடி கிராமங்கள் பல அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. மொறட்டுவ, அம்பாந்தோட்டை உள்ளிட்ட பெரும்பாலான மீன்பிடி கிராமங்களில் வாழும் மீனவர்களுக்கு நிரந்தர வீடு வழங்கப்பட்டுள்ளது. 30 வருடகால யுத்தத்தினால் வடக்கு மக்களின் பிரதான வாழ்வாதாரமான மீன்பிடி கைத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது வடக்கில் மீன்பிடி கைத்தொழில் மேம்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ஞா)

## ரூ. 120 கோடி பெறுமதியான
# போதைப் பொருட்களுடன் 4 சந்தேக நபர்கள் கைது
## மாரவில பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

120 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் மற்றும் ஐஸ்ரகபோதைப்பொருள்தொகையொன்றுடன் 4 சந்தேகநபர்கள் மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடுவெவ மாரவில பகுதியில் வைத்து குறித்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது 100 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளும் மற்றும் 100 கிலோ கிராம் ஐஸ் ரக போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ஞா)

## கொரோனாத் தொற்றால்
# வல்வையைச் சேர்ந்தவர் கனடாவில் உயிரிழப்பு

(ரொறன்றோ)

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவர், கனடா மொன்றியலில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளார். 54 வயதுடைய சரவணமுத்து சுபானந்தா என்பவரே இவ்வாறு கொரோனா தொற்றினால் மரணமாகியுள்ளார்.

தொற்றுக்குள்ளாகி தனிமைப்படுத்தியிருந்த நிலையில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போது இவர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை பிள்ளைகளும் தொற்றுக்குள்ளாகி தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஞா)

# மரண அறிவித்தல்

தோற்றம்
21 – 04 – 1953



மறைவு
06 – 12 – 2020

## தர்மலிங்கம் சிறீஸ்கந்தராசா (சிறி)

நெல்லியடி வடக்கு, வதிரி, துலாக்கட்டைப் பிறப்பிடமாகவும் வதிரி புலவரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிறீஸ்கந்தராசா நேற்று (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தஞ்சம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மற்றும் தங்கம்மாவின் அன்புக் கணவரும், சுதர்சன் (சுவிஸ்), நிரஞ்சனா (கனடா), வதனா (கனடா), சுவர்ணா (பிரித்தானியா), கிருஷாந்தி (கட்டார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிஜா (சுவிஸ்), நேசன் (கனடா), சசிகரன் (கனடா), நமிந்தன் (பிரித்தானியா), ஜெயராம் (கட்டார்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தங்கரத்தினம், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் விக்கினேஸ்வரன், ஜெயபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிவேஷ்கா, அஷ்விகா, அஷ்ரித், கிருஷால், துஷான், சுஜிக்கா, லக்ஷன், ஜானுகா, நயனிகா, அபிஷாந், ஆருஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2020) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.30 மணிக்கு ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-851)

தங்கம்மா +94212264047/+94777064095
சுதர்சன் +41629223220/ +41796777096
நிரஞ்சனா +4169038221, வதனா +6472836577
சுவர்ணா +447576442042, கிருஷாந்தி +97433669565

தகவல்:-
குடும்பத்தினர்

## மன்னார் மாந்தை மேற்குப் பகுதியில்
# அதிகளவான கால்நடைகள் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(மன்னார்)

புரேவி புயலால் பெய்த கடும் மழை காரணமாக மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட பெரிய மடு குளப்பகுதியில் மேய்ச்சலுக்கு சென்ற அதிகளவான கால்நடைகள் பலியாகியுள்ளதுடன் அதிகளவான கால்நடைகள் காணாமலும் போயுள்ளது.

மன்னார் பெரியமடு குளத்தை அண்டியபகுதியில் மேய்ச்சலுக்காக சென்ற நிலையில் சீரற்ற காலநிலை காரண மாக ஏற்பட்ட காற்றுடன் கூடிய தொடர் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் அதிக அளவான மாடுகள் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டுள்ளதுடன் சில மாடுகள் இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் பிரதேச செயலகம் உறுதிப்படுத்தியதை தொடர்ந்து குறித்த பெரிய மடுப் பகுதியில் காணமால் போன கால்நடைகளை மீட்கும் பணிகளை கடற்படை , இரணுவம் மற்றும் பொதுமக்களின் பக்களிப்புடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம் பெற்றது.

இதன் போது அதிகமான மாடுகள் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் ஏனைய காணாமல் போன மாடுகளை மீட்கும் பணியில் கடற்படை மற்றும் மாவட்ட பிரதேச செயலகங்கள் ஈடுபட்டு வருகின்றன. (ஞா,285)


வடமராட்சி வாடிக்கையாளர்களுக்கு
ஓர் நற்செய்தி!!!
தங்களின் நீண்ட பயணங்களுக்கு ஓர் முற்றுப்புள்ளி!!!
“யாழ். பற்சிகிச்சை” நிலையத்தின் ஓர் அங்கமான



ஆரோக்கியா
AAROKYA DENTAL CARE
தற்போது உங்களுக்கு மிக அருகாமையில்
பெற்றோல் செட் ஒழுங்கை, நெல்லியடி
இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
ஆரம்ப சேவையாக வழங்குகின்ற எமது கட்டண சலுகைகளை
அனுபவித்திடுங்கள்.
இன்றே உங்கள் பற்சேவையை பெற்றிட அழையுங்கள்.
075 975 9827, 075 975 9828, 074 070 2241
(4852)

# பாடசாலை நடவடிக்கைகள் தொடர்பாக
## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் இன்று திங்கட்கிழமை நடைபெறுவது தொடர்பில் விசேட அறிவித்தல்கள் எதுவும் விடுக்கப்படவில்லை எனின், கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட சகல அதிபர்களுக்கும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா அறிவித்துள்ளார்.

1.கொவிட்-19 மற்றும் புயல், வெள்ள அனர்த்தங்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை அந்தந்தப் பாடசாலை அதிபர்கள், பாடசாலை மட்ட சுகாதார செயற்பாட்டுக் குழு மற்றும் பாடசாலை மட்ட அனர்த்த முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் ஊடாகப் பொருத்தமான முறையில் அணுகி நடவடிக்கை எடுக்க முடியும். அவ்வாறு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு, அந்தந்தப் பாடசாலைகளுக்குரிய கோட்டக் கல்வி அலுவலர்களுடன் உரிய தொடர்பாடல்களைப் பேணி அவர்களிடம் ஆலோசனை களைப் பெறுவதோடு தினசரி அறிக்கைகளை உரிய முறையில் அனுப்பி வைக்க வேண்டும்.

2.புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகமாகத் தங்கியுள்ள பின்வரும் பாடசாலைகள், உரியவாறு மீள ஒப்படைக்கப்படும் வரை நடைபெற மாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

இன்று

செங்குந்தா இந்துக் கல்லூரி, கொட்டி நமசிவாயம் வித்தியாலயம், சென் றொக்ஸ் வித்தியாலயம், நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை, வண்ணை ஸ்ரீ வைத்தி லிங்கம் வித்தியாலயம், ஊரெழு கணேசா வித்தியாலயம்

3.மிக அதிகமாகப் பாதிக்கப்பட்ட மற்றும் வெள்ளம் தேங்கி நிற்கின்ற பாடசாலைகள் கற்றற் செயற்பாடுகளுக்குப் பொருத்தமற்றதாக இருப்பின் குறித்த குழுக்களின் ஊடாகப் பொருத்தமான தீர்மானங்களை எடுத்து கோட்டக் கல்வி அலுவலரூடாக எனக்கு அறிவித்து பாடசாலைச் செயற்பாடுகளை உரிய சில தினங்களுக்கு நிறுத்தி வைக்கும் பொருட்டு அனுமதிகோர முடியும்.

4.சூழ்நிலை மாற்றங்கள் கருதி இவ்வறிவித்தல்களில் எதுவும் மாற்றங்கள் இருப்பின் அது தொடர்பில் தங்களுக்கு உரியவாறு அறிவிக்கப்படும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (ஐ)

# தானம் வழங்கியவருக்கு தொற்று

(கொழும்பு)

களனி, சபுகஸ்கந்த பிர தேசத்தில் விகாரையொன்றுக்கு தானம் வழங்கிய நபரொருவருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப் பட்டுள்ளது.

இதன் காரணமாக குறித்த விகாரையின் தேரர்கள் உள்ளிட்ட சிலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மாகொல பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். பெரேரா தெரிவித்தார்.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளான நபர் இரண்டா வது முறையாகவும் பி.சி.ஆர்.பரிசோதனைக்காக சுய தனிமைப்படுத்தலுக் குட்படுத்தப் பட்டிருந்த நபர் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# 208 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தாக்கத்தின் 2ஆவது அலை ஊடாக நுவரெலியா மாவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை வரை, 208 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காண ப்பட்டுள்ளதாக அம்மாவட்ட சுகாதார பணிப்பாளர் வைத்தியர் இமேஷ் பிரதாபசிங்க தெரிவித்துள்ளார்.

இதுவரை 4 ஆயிரம் பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சுமார் 311 பேர் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மறுஅறிவித்தல் விடுக்கப்படும் வரை இப்பகுதிகளில் தனிமைப்படுத்தல் நடை முறைகள் நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், 2ஆது அலையான பேலியகொட கொத்தணி ஊடாக மீன்வாங்க சென்ற பலருக்கு வைரஸ் தொற்றியது. இதன்மூலம் தோட்டப்பகுதிகளிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதன்பின்னர் தீபாவளி பண்டிகைக்காக வெளிமாவட்டங்களில் இருந்து வந்தவர்கள் ஊடாக தற்போது வைரஸ் பரவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கைதிகளின் பாதுகாப்பை அரசே உறுதிப்படுத்த வேண்டும்

(கொழும்பு)

மகர சிறைச்சாலையில் கைதிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில்ஆணைக்குழுவொன்றை அமைத்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அந்த விசாரணைகள் பக்கச்சார்பற்றதும், சுயாதீனமானதுமான முறை யில் முன்னெடுக்கப்பட வேண்டும் என தேசிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டு இதனை வலியுறுத்தியிருக்கும் தேசிய மக்கள் சக்தி அந்த அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது,

மகர சிறைச்சாலையில் கடந்த 29 ஆம் திகதி கைதிகள், கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் 11 கைதிகள் உயிரிழந்ததுடன், நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் பல வருடங்களுக்கு முன்னர் வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற கைதிகளின் கொலைச் சம்பவத்தை நினைவுபடுத்துகிறது.

சிறை வைக்கப்படும் கைதிகள் அனைவரும் அரசாங்கத்தின் பொறுப்பிலிருப்பவர்கள்.

எனவே அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இந்த சம்பவம் தொடர்பில் அதிகாரிகளின் மாறுபட்ட கருத்துக்களுக்கு மத்தியில், மக்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளமை ஆச்சரியத்திற்குரியதல்ல.

கடுமையான குற்றச் செயலைச் செய்து ஒருவர் சிறைவைக்கப்பட்டாலும், நாட்டின் பிரஜை என்ற வகையில் அடிப்படை மனித உரிமைகளின் பிரகாரம் அவருக்கு உயிர் வாழ்வதற்கு உரிமை இருப்பதுடன், அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நபர்களுமாவர்.

கலவரங்களை அடக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில், குற்றவியல் வழக்கு விசாரணைகள் தொடர்பான குறிப்பேடுகளிலும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிராயுதபாணிகளை துப்பாக்கியால்சுட்டுக் கொலை செய்வது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அதனால் இந்தச் சம்பவத்திற்கு அனைவரும் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

நாட்டின் குற்றவியல் சட்டத் தின் பிரகாரம், இவ்வாறு அரசாங்கத்தின் பொறுப்பில் இருப்பவர்கள் கொலைச் செய்யப்பட்டால், இது தொடர்பாக நீதவான் ஒருவரின் முன்னிலையில் திறந்த பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதேவேளை இவ்வாறு உயிரிழந்தவர்களின் சடலங்கள் தொடர்பான மரண பரிசோதனைகளை வைத்தியர் ஒருவர் மேற்கொள்ள வேண்டும்.

சட்ட விதிமுறைகளுக்கமைய இடம்பெறும் நீதவான் பரிசீலனைகள் திறந்த முறையில் இடம் பெறும் போது, அந்த உயிரிழப்புகள் தொடர்பில் எந்தவொரு நபரும் வாக்குமூலம் வழங்குவதற்கு உரிமை உண்டு.

இந்நிலையில் இந்த பரிசீலனைகள் தொடர்பில் முறையான ஒழுங்கு விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

இந்த விசாரணைகளின் இறுதியில் கிடைக்கப் பெறும் முடிவுகளை உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரைப் போன்று நாட்டு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

கைதிகளின் உயிரிழப்பு தொடர்பில் அதிகாரிகள் கூறுவது சத்தியமா? என்பது தொடர்பில் உயிரிழந்தவர்களின் மரண மற்றும் பிரேதப் பரிசோதனை முடிவுகளின் பிரகாரமே தீர்மானம் எடுக்கமுடியும்.

அதனால் இது தொடர்பான முடிவறிக்கைகளை பகிரங்கப்படுத்த வேண்டும்.

எனினும் தற்போது இது தொடர்பான உண்மைகளை மூடி மறைக்கும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தோன்றுகின்றது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் நாட்டின் சட்டம் மற்றும் ஜனநாயகம் தொடர்பில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் நாட்டுக்கு அவப்பெயர் கிடைத்துள்ளது.

நாட்டுக்கு கிடைத்துள்ள இந்த அவப்பெயரை நீக்க வேண்டுமெனில், இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஒழுங்கு விதிகளுக்கமைய உடனே செய்து முடிக்க வேண்டும்.

இது ஒரு கடுமையான சம்பவம் என்பதனால், அது தொடர்பான விசாரணைகள் உயர் நீதிமன்ற நீதிபதியொருவரின் தலைமையில் நியமிக்கப்படும்ஆணைக் குழுவினால் பக்கச்சார்பற்ற முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதற்கு இடமளிக்க வேண்டாம் என்று ஜனநாயகத்தை மதிக்கும் மனிதநேயம் மிக்க அனைவரையும் அழுத்தம் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு இந் நாட்டில் அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அத்துடன்மகர சிறைச்சாலை சம்பவத்தின் தாக்கம் ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் எதிரொலிக்கும் என்பதால் அரசாங்கம் அதற்கு பொறுப்புக்கூறியாக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படியே பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுளளனர்.

மக்கள் சார்பில் பாராளு மன்றத்தில் கருத்துகளை கூறுவதற்கும் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்குமான உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.

தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு தொடர்பில் அல்லாமல் ஏனைய விடயங்களை பேசுவதற்கான அனுமதி அவர்களுக்கு இருக்கின்றது. தற்போதைய பாராளுமன்றத்தில் துவேசம் கக்கும் உறுப்பினர்களே அதிகம் இருக்கின்றனர்.

பிள்ளையானை விடுதலை செய்தது எமக்கு பிரச்சினை இல்லை. அவ்வாறு தமிழ் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்என்பதே எமது கோரிக்கை. அப்போது தான் ஒரே நாடு, ஒரே சட்டம் என்பது நடைமுறை சாத்தியமாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# மனித உரிமை மீறப்படும் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் எவ்வாறு வருவார்கள்?



(கொழும்பு)

கொவிட்-19 காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் சுற்றுலாத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கத்திடம் எந்த நிவாரணமும் இல்லை. மகர சிறைச்சாலை கலவரமும் சுற்றுலாத்துறைக்குப் பாதிப்பாகும் என மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களைச் சந்தித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், சுற்றுலாத்துறையை உயர்ந்த நிலைக்கு கொண்டுசெல்ல மனித உரிமை முக்கியமாகும்.

அதனை எமது அரசாங்கம் செய்திருந்தது. அதனால்தான் எமது சுற்றுலாத்துறை சர்வதேச மட்டத்தில் உயர்ந்த நிலைக்கு வந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் சுற்றுலாத்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டது. என்றாலும் குறுகிய காலத்தில் சுற்றுலாத்துறையை பழைய நிலைக்கு கொண்டுவர முடிந்தது.

மேலும் கொரோனா காரணமாக தற்போது சுற்றுலாத்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக சுற்றுலாத்துறையுடன் சம்பந்தப்பட்ட சிறிய வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர். சுற்றுலா பயணிகளை வாகனங்களில் ஏற்றிச் சென்றவர்கள் வாகனங்களின் லீசிங் செலுத்த முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதனால் அவர்கள் தங்களது வாகனங்களில் தற்போது தேங்காய் விற்பனை செய்கின்றனர். ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு எந்தவித நிவாரணத்தையும் வழங்கவில்லை.

அனைவருக்கும் வழங்கும் 5 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று கொரோனாவால் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டிருப்பது உண்மையாக இருந்தாலும் அதனை ஆரம்பத்திலே தடுப்பதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டும் அரசாங்கம் அதைக் கண்டு கொள்ளவில்லை.

கொரோனா அச்சுறுத்தல் வந்த ஆரம்பத்திலே ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் விமான நிலையத்தை மூடுமாறு எதிர்க்கட்சி தலைவர் இந்த சபையில் தெரிவித்தார். ஆனால் அரசாங்கம் அதனை விமர்சித்து வந்தது.

அன்று விமான நிலையத்தை மூடியிருந்தால் இந்தளவு பாதிப்பு நாட்டுக்கு வந்திருக்காது. அதேபோன்று தற்போது மகர சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரம் காரணமாகவும் சுற்றுலாத்துறைக்கு பாதிப்பு ஏற்படும். மனித உரிமை மீறப்படும் நாட்டுக்கு சுற்றுலா பயணிகள் வருவதில்லை என அவர் சுட்டிக்காட்டினார். (நி-7)

# "ஆயிரத்தில் ஏமாற்றாதே" தொழிற்சங்கம் போராட்டம்




(ஹற்றன்)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு விடயத்தில் அரசு தொழிலாளர்களை ஏமாற்ற வேண்டாம் என கோரி ஹற்றனில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஜே.வி.பியின் தொழிற்சங்கமான அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தினால் இந்தப் போராட்டம் நேற்று ஹற்றன் நகர மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.

ஏமாற்ற வேண்டாம், வரவு செலவு திட்டத்தில் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பளத்தை உள்வாங்கு, அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் போன்ற பல்வேறு வசனங்கள் எழுதிய பதாகைகளை போராட்டக்காரர்கள் இதன்போது கைகளில் ஏந்தியிருந்தனர்.

அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்க தலைவர் கிட்ணன் செல்வராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தை, நுவரெலியா மாவட்ட ஆசிரியர் சங்க செயலாளர் மஞ்சுள சுர்வீர முன்னெடுத்தார்.

கொரோனா வைரஸ் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடைவெளிகளை கடைப்பிடித்து 15 உறுப்பினர்களுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது: (நி-7)

# மகர அமைதியின்மை 116 பேர் வாக்கு மூலம்

(கொழும்பு)

மகர சிறைச்சாலையில் கடந்த வாரம் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில்,குற்றப் புலனாய்வு பிரிவினரால், 116 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதென, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நேற்று முன்தினம் மாத்திரம் 38 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை மொத்தமாக 116 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் இதில், சிறைச்சாலை அதிகாரிகள் 45, வைத்தியர்கள் 11, தாதியர் 7, கைதிகள் ஆகிய 53 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-7)

# அனில் ஜாசிங்கவிற்கு புதிய பதவி

(கொழும்பு)

சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளராக விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்கவை நியமிப்பதற்கு, உயர் பதவிகளுக்கான பாராளுமன்றக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, நான்கு அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் மற்றும் தூதுவர் ஒருவருக்கு, பதவிகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற செயலகம் நேற்று தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நீர் வழங்கல் அமைச்சின் செயலாளராக வைத்தியர் பிரியத் பந்து விக்ரமசிங்கவை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், உயர்கல்வி அமைச்சுக்கான செயலாளராக பேராசிரியர் கபில பெரேராவையும் நீதியமைச்சுக்கான செயலாளராக பி.கே.மாயாதுன்னவையும் நியமிப்பதற்கு, உயர்பதவிகளுக்கான பாராளுமன்றக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதேவேளை, கட்டாருக்கான இலங்கைத் தூதுவராக எம்.மொஹட்டை நியமிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற செயலகம் தெரிவிக்கின்றது.

சபாநாயகர் மகிந்த யாப்பா தலைமையிலான உயர்பதவிகளுக்கான பாராளுமன்றக் குழுவில், சமல் ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன, டக்ளஸ் தேவானந்தா, உதய கம்மன்பில, விதுர விக்ரமநாயக்க, சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே, அநுர பிரியதர்சன யாப்பா மற்றும் ஜோன் செனவிரத்ன ஆகியோர் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-7)

# பதவி நீக்கப்பட்ட 156 பேர் மீண்டும் சேவையில்

(கொழும்பு)

துறைமுக அதிகார சபையில் பயிற்சியாளர்களாக கடமையாற்றிய நிலையில், பணி நீக்கம் செய்யப்பட்ட 156 பேர் மீண்டும் கடமைகளில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனரென, துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான நியமனங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளதுடன், பல திறன் பொறியியிலாளர்கள், பாதுகாப்பு கட்டுப்பாட்டாளர்கள், சாரதிகள் என பல துறைகளில் இவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த 156 பேரும் 2015 ஆம் ஆண்டு இலங்கை துறைமுக அதிகார சபையில் பயிற்சியாளர்களாக கடமையாற்றிய நிலையில், பணிநீக்கம் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# டெங்கு நோயால் 415 பேர் பாதிப்பு

(வாழைச்சேனை)

வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் நேற்று முன்தினம் வரை 415 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில் வாழைச்சேனை, பேத்தாழை, கருங்காலிச்சோலை பிரதேசத்தில் உள்ள வீடுகளில் டெங்கு நுளம்பு குடம்பிகள் காணப்படுகின்ற இடங்களை அடையாளப்படுத்தி மக்களுக்கு தெளிவூட்டும் நடவடிக்கையும் வீட்டு வளாகம் பரிசோதனை செய்யும் நடவடிக்கையும் நேற்று இடம்பெற்றுள்ளது. (ஐ)

# பதவியிலிருந்து விலகும் நேரம் ட்ரம்ப் விடுத்துள்ள உத்தரவு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் விடுத்த உத்தரவை அடுத்து ஜனவரி 15 ஆம் திகதிக்குள் சோமாலியா நாட்டிலிருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுவதாக பென்டகன் அறிவித்துள்ளது. ஆபிரிக்காவில் உள்ள சோமாலியா நாட்டின் உள்நாட்டுப் படைகளுக்கு அமெரிக்கப் படைகள் பயிற்சி அளித்து வருகின்றன. அல்கொய்தா உடன் தொடர்பில் உள்ள அல்-ஷபாப் தீவிரவாதக் குழுக்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் அமெரிக்கப் படைகள் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதிக்குள் சோமாலியா நாட்டில் உள்ள அமெரிக்கப்படைகள் திரும்பப் பெறப்படுவதாக ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

எனினும் இதனால் பயங்கரவாதத்திற்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட பின்னடைவாகக் கருதத் தேவையில்லை என பென்டகன் தெரிவித்துள்ளது.

முன்னதாக கடந்த மாதம் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் உள்ள அமெரிக்கப்படைகளின் எண்ணிக்கையைக் குறைக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 16 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள, ஹற்றன் நோட்டன்பிரிஜ் தண்டுகல தோட்டத்தில் நேற்று முன்தினம் 16 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கர்ப்பிணிப் பெண் உள்ளிட்ட 9 பெண்களுக்கும் ஆண்கள் 7 பேருக்குமே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை அந்தத் தோட்டத்தில் மொத்தமாக இதுவரையில் 26 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களோடு நெருங்கிப் பழகிய 35 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# ஐந்து மாதங்களுக்கள் காணி வழங்குவதாக உறுதி

## கைவிடப்பட்டது போராட்டம்

(பனிக்கன்குளம்)

காணி வழங்குவது தொடர்பான முறையான நடவடிக்கைகளுக்காக குறைந்தது ஐந்து மாதகாலம் செல்லும் எனவும் உங்களது விபரங்களின் அடிப்படையில் உங்களுக்கு காணிவழங்க வேண்டியுள்ளதை நன்கு அறிந்துள்ளேன்.

எனவே ஐந்து மாத கால அவகாசம் வழங்குமாறும் அதற்குள் உங்களுக்கான காணிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந் உறுதிமொழி வழங்கியதை தொடர்ந்து வேணாவில் மக்கள் ஆரம்பித்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் வேணாவில் கிராமத்தில் காணி கோரி வீதிக்கு வந்த மக்கள் கொட்டில்கள் அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் 16 பேர் தமக்கு உறவினர்களின் காணிகளில் தொடர்ந்தும் வாழ வழியின்றி தமக்கான காணிகள் வழங்கக்கோரி வீதிக்கு வந்து வீதியோரத்தில் அரச காணி ஒன்றில் 16 பேரும் தனித்தனி கொட்டில்களை போட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக தமக்கான வாழ்விட காணிகளை வழங்குமாறு கோரி புதுக்குடியிருப்பு பிரதேச காணிக்கிளை பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலரிடம் தமது கோரிக்கைகளை முன்வைத்தும் எந்தவிதமான தீர்வுகளும் கிடைக்காத நிலையில் தமது கிராமத்தில் உள்ள அரச காணி ஒன்றில் வீதியோரத்தில் கொட்டில்களை அமைத்து காணி கோரி போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இந்நிலையில் சம்பவ இடத்துக்கு வந்த புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் சி.ஜெயகாந், போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் குறைகளை ஒவ்வொரு குடும்பங்களாக கேட்டறிந்து கொண்டார்.

அதனை தொடர்ந்து அவர்களின் நிலைமைகளை புரிந்து கொள்வதாகவும் காணி வழங்குவது தொடர்பான முறையான நடவடிக்கைகளுக்காக குறைந்தது ஐந்து மாதகாலம் செல்லும் எனவும் உங்களது விபரங்களின் அடிப்படையில் உங்களுக்கு காணிவழங்க வேண்டியுள்ளதை நன்கு அறிந்துள்ளேன்.

எனவே ஐந்து மாத கால அவகாசம் வழங்குமாறும் அதற்குள் உங்களுக்கான காணிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த உத்தரவாதத்தின் அடிப்படையில் குறித்த மக்கள் தமது போராட்டத்தை நிறுத்தி தாம் அமைத்த கூடாரங்களை கழற்றிக் கொண்டு குறித்த இடத்தை விட்டு கலைந்து சென்றனர். (ஜ-5-281)

# ஆறுமுக நாவலரின் 141 ஆவது நிறைவு தினம்





(நெளுக்குளம்)

ஈழத்தில் சைவத்தினை வளர்த்த பெரியாரான ஆறுமுக நாவலரின் 141 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள அவரது சிலையடியில் இடம்பெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களினால் அமைக்கப்பட்ட குறித்த சிலைக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர் அமைப்பின் ஊடாக தென்னங்கன்றுகளும், புதிய ஆடைகளும் வழங்கப்பட்டன. (ஜ-5-299)



# மன்னாரில் விவசாய செய்கையை பாதுகாக்கும் நடவடிக்கை முன்னெடுப்பு

(மன்னார்)

நானாட்டான் பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட பரிகாரிக்கண்டல் கிராமத்தில் உள்ள கொம்பன் சாய்ந்த குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளமையினால் அப்பகுதியில் சுமார் ஆயிரம் ஏக்கர் விவசாய செய்கை பாதிப்படைந்துள்ள நிலையில், குறித்த விவசாய செய்கையைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல் தலைமையில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த குளத்தின் வான் கதவுகள் அண்மையில் புதிதாக அமைக்கப்பட்டு குளத்தின் நீர்மட்ட கொள்வனவு அதிகரிக்கப்பட்டது.

இவ்வாறு குளத்தின் கொள்வனவு அதிகரிக்கப்பட்டமையினால் கொம்பன் சாய்ந்த குளத்தின் மேல் பகுதியில் அமைந்துள்ள மூக்கராயன் குளம், சிறுகண்டல் குளம், பரிகாரிகண்டல் குளம், கடந்த குளம், பெற்றான் குளம் ஆகிய குளங்களின் மேலதிக நீர் கொம்பன் சாய்ந்த குளத்தின் வான் கதவு ஊடாக வெளியேற வேண்டும்.

வான் கதவினூடாக வெளியேறும் நீர் போதுமானதாக இல்லாத காரணத்தினால் குறித்த குளங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் விவசாயச் செய்கையானது நீரில் மூழ்கிய நிலையில் உள்ளது.

சுமார் 1000 ஏக்கர் விவசாயச் செய்கை இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் குறித்த நிலை காணப்பட்டால் ஒட்டுமொத்த விவசாய செய்கையும் பாதிப்படையும் நிலை ஏற்படும்.

இவ்விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் உரிய அமைப்பினர் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மேல் தலைமையில் நானாட்டான் பிரதேசச் செயலாளர் எஸ். கிறிஸ்கந்தகுமார், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மாவட்ட உதவிப்பணிப்பாளர் கே.திலீபன், பிரதேச நீர்ப்பாசன பணிப்பாளர், பொறியியலாளர், பொறியியல் உதவியியலாளர்கள், கமக்கார அமைப்பின் தலைவர், பிரதேசச் செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள், பரிகாரி கண்டல் இராணுவ அதிகாரி, நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர் ஆகியோர் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டதோடு, கொம்பன் சாய்ந்த குளத்தின் வான் கதவிற்கு அருகில் பாதுகாப்பான முறையில் அதற்கான பொறியியல் தொழில் நுட்பத்தோடு வாய்க்கால் வெட்டி திறக்கப்பட்டு நீர் வெளியேற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் நீர் வெகுவாக குறைந்து பாதிக்கப்பட்டுள்ள விவசாய செய்கை பாதுகாக்கப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (5-285)

# கம்பர் மலையில் 6 வீடுகள் முற்றுமுழுதாக சேதம்



(கரணவாய்)

புரேவி புயல் காரணமாக வல்வெட்டித்துறை கம்பர் மலை கிராமத்தில் 50 வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

உடுப்பிட்டி வடக்கு ஜே/353 கிராம உத்தியோகத்தர் பிரிவு கம்பர்மலையில் 6 வீடுகள் முற்றுமுழுதாகவும் ஏனையவை பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. கால்நடை வளர்ப்புக் கொட்டில்கள் அத்துடன் இரண்டு கோயில்கள் என்பனவும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட மக்கள் உறவினர்கள் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அப் பகுதி கிராம உத்தியோகத்தர் சேத விபரங்களை சேகரித்து பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பித்துள்ளார். (5-60)

# எழுதுமட்டுவாழ் பகுதியில் நெற்பயிர், மேட்டு நிலப் பயிர்கள் சேதம்

## கமக்கார அமைப்பு தெரிவிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட 400 ஏக்கர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழிவடைந்திருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ. தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அண்மையில் பெய்த கன மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் எழுதுமட்டுவாழ் தெற்கு பகுதியில் 80 சதவீதமான நெற்பயிர்கள் நீரில் மூழ்கி அழிவடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒட்டுவெளி வயல், செட்டிக் கேணி வயல், குஞ்சு விழுபளை மற்றும் பெரிய விழுபளை ஆகிய பகுதிகளில் உள்ள வயல் நிலங்களே இவ்வாறு மழை வெள்ளத்தால் சேதமடைந்திருப்பதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மழை வெள்ளம் காரணமாக எழுதுமட்டுவாழ் தெற்கு மக்களால் மேட்டு நிலங்களில் பயிரிட்டிருந்த முருங்கை, கத்தரி, மிளகாய் உள்ளிட்ட காய்கறி மரக்கறிச் செய்கையுடன் சிறுதானியப் பயிர்களும் முற்றுமுழுதாக அழிவடைந்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

வெள்ள நீர் வழிந்தோடும் மதகுகள் உரிய பராமரிப்பு இன்றி காணப்படுவதனால் தான் நீர் ஓட்டம் இன்றித் தேங்கி பயிர்கள் அழிவடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-30)

# 'பசுமையான யாழ்' 3 ஆம் கட்டம் ஆரம்பம்




(குப்பிழான்)

"பசுமையான யாழ்" எனும் தொனிப் பொருளில் "விதை யனைத்தும் விருட்சமே" இளைஞரணி முன்னெடுத்து வரும் மரம் நடும் செயற்றிட்டத்தின் மூன்றாம் கட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் ஆரம்பமானது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயப் பிரதமகுரு ந. குமார சாமிக் குருக்கள் கலந்து கொண்டு மரநடுகைச் செயற் றிட்டத்தின் மூன்றாம் கட்டத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் வலி. வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்தன், இராணுவ அதிகாரி லெப்டினனட் கேணல் நிசங்க, "விதை யனைத்தும் விருட்சமே" இளைஞரணியைச் சேர்ந்த உறுப்பினர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அமரர் கந்தசாமி கணேசலிங்கத்தின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தாரின் முழு அனுசரணையுடன் நேற்றைய தினம் ஆரம்பமான "பசுமை யான யாழ்" மூன்றாம் கட்ட மரம் நடும் செயற்பாடு இளவாலை ஆலடிச் சந்தி வரை முன்னெடுக்கப்படவுள்ளது. (5-18)

# மயான கொட்டகை சீர்செய்யப்படுமா?

(அளவெட்டி)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானம் எவ்வித பராமரிப்பும் இன்றி பற்றைக் காடாகவும் எரியூட்டும் கொட்டகை கூட மேற்கூரைகள் இன்றி காணப்படுகின்றது.

மழை காலங்களில் தகனம் செய்யும்போது மக்கள் மிகுந்த சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (5-110)

# வீடு உடைத்து திருட்டு

(கரணவாய்)

வீடு உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த சங்கிலி, காப்பு, தோடு, பணம் மற்றும் காணி உறுதிப்பத்திரம் உள்ளிட்ட பொருட்களை திருடி சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஒருமணியளவில் கரவெட்டி சாமியன் அரசடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டில் 80, 70 வயதுடைய இரண்டு வயோதிப மாதுகள் இருந்த நிலையில் அவர்களுக்குத் தெரியாமல் உள்நுழைந்த திருடர்கள் மேற்படி பொருட்களையும் அத்துடன் காணி உறுதிப்பத்திரங்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5)



கவிஞர் நந்தினியின் "பாவிசை" சிறுவர் பாடல் தொகுதி நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. ஓய்வுபெற்ற அதிபர் பொ. கனகரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரனும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரனும் கலந்து கொண்டனர். (படம்:சுபேசன்)

# 370 பேர் குணமடைந்து வீடுகளுக்கு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 370 பேர் குணமடைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா வைரஸில் இருந்து குணமடைந்த மொத்த நோயாளர்களது எண்ணிக்கை 20 ஆயிரத்து 90 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்த நிலையில், நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் 6 ஆயிரத்து 631 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். நாட்டில் இதுவரையில் 27 ஆயிரத்து 228 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களில் சிகிச்சை பலனின்றி இதுவரையில் 137 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கசிப்புடன் கைதானவர் பிணையில் விடுவிப்பு

(தருமபுரம்)

"தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிகுளம் பகுதியில் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத்தகவலுக்கமைய 40 லீற்றர் கசிப்பு வைத்திருந்தக்குற்றச்சாட்டில் ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என தருமபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சிசெர தெரிவித்துள்ளார். (5-316)

# 5 வருடத்தில் சுற்றுலாத்துறையால் 10 பில்லியன் டொலர்

## இதுவே எமது இலக்கு என்கிறார் பிரசன்ன

(கொழும்பு)

சுற்றுலாத்துறையின் மூலம் 2025ஆம் ஆண்டாகும்போது தேசிய வருமானத்துக்கு 10 டொலர் பில்லியன்களை இணைத்துக்கொள்வதே அரசாங்கத்தின் இலக்கு. அதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் கொரோனா காரணமாக ஓரளவு பின்னடைவை ஏற்படுத்தி இருக்கின்றது என சுற்றுலாத்துறை விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டுக்கு அதிகளவான அந்நியச் செலாவணியை பெற்றுக்கொடுக்கக்கூடிய துறையாக சுற்றுலாத்துறை காணப்படுகின்றது. தற்காலத்தில் மிகவும் சவாலுடனே இத்துறையை கொண்டுசெல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஜனாதிபதியின் சௌபாக்கிய நோக்கில் சுற்றுலாத்துறை மூலம் 2025 இல் நாட்டின் தேசிய வருமானத்துக்கு 10 டொலர் பில்லியன்களை வேசேர்ப்பதாகும். அதற்கான வேலைத்திட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

என்றாலும் உலக தொற்று நோயான கொரோனா காரணமாக சுற்றுலாத்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் கொரோனாவுடன் வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் சுற்றுலாப் பயணிகளை மீண்டும் நாட்டுக்கு கொண்டுவர சுகாதார வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. சுகாதாரத்துறையின் அனுமதிகிடைத்ததுடன் விமான நிலையத்தை திறந்து சுற்றுலாப்பயணிகளை கொண்டுவர நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன் கடந்த மார்ச் மாதத்தில் எமது நாட்டுக்கு 5 இலட்சத்து 7 ஆயிரத்து 311 சுற்றுலா பயணிகள் வந்துள்ளனர். இதனைத்தொடர்ந்திருந்தால், வருடத்துக்கு 7 இலட்சம் சுற்றுலா பயணிகளை கொண்டுவரும் எமது இலக்கை அடைந்திருக்க முடியும். என்றாலும் இது கொரோனா காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் எமது நாடு சுற்றுலாத்துறைக்கு மிகவும் கவர்ச்சிகரமான நாடாகும். என்றாலும் 30 வருடகால பயங்கரவாத யுத்தம் காரணமாக நாங்கள் 30 வருடம் பின்னுக்கு சென்றோம். சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருந்தன. அன்று தமிழ் தலைவர்கள் யுத்தத்தை வைத்து பிழைப்பு நடத்தினார்கள். தற்போதும் இங்கு கதைக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நாடு கடந்து வாழ்பவர்களின் பணத்துக்காகவும் அவர்களின் நோக்கத்துக்காகவும் செயற்படுகின்றனர். இதனை கைவிட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைவரும் ஒற்றுமையாக வாழமுன்வர வேண்டும். அதற்கான சூழல் இருக்கின்றது எனத் தெரிவித்தார். (ஐ)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 19 3/4 செவ் 4 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Diploma, Finland<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/10455 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 20 1/2 செவ் 7 இல் உயரம்: 163cm<br>தகைமை/தொழில்: A/L, தனியார்தொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: G/10485 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா: 17 1/2 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, Accounting & Finance, UK<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10456 | பிறப்பு: 1993 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: பரணி 1<br>கி.பா: 82 சூரிசெவ் 8 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் இந்து சமயத்தவர்களும் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/ 10487 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம், படித்த பெண்<br>தொ.இ: B/10458 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: HNDE<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10490 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 32 செவ் 8 இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/10461 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 68 1/2 செவ் 1 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBM பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார்தொழில்<br>தொ.இ: G/10491 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# அரச பேருந்து சேவையில் ஏற்படும் மாற்றம்



(கொழும்பு)

பேருந்து பயணங்களின் போது இன்று முதல் இரண்டு பேருந்துகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

விசேடமாக பாடசாலை நேரங்களில் மற்றும் அலுவலக நேரங்களில் குறித்த முறையில் இரண்டு பேருந்துகளை ஈடுபடுத்த போக்குவரத்து அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பயணிகளை இருக்கையில் மாத்திரம் அழைத்துச் செல்வதற்கு கடந்த தினம் பேருந்து பயணக் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

எனினும், சில வீதிகளில் அதிகமான பயணிகள் ஏற்றிச் செல்லப்படுவதாக தொடர்ந்தும் முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

நாம் எழுத்து மூலம் அறிவித்துள்ளோம். அவ்வாறு செயற்படும் பேருந்துகள் பொறுப்பேற்கப்பட்டு தனிமைப்படுத்தல் நடைமுறைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று.

அதேபோல் ஒவ்வொரு பேருந்து பயணங்களின் போதும் இரண்டு பேருந்துகளை ஈடுபடுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)


# FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA

## Registration for General / Honours Degree Examination in Science (First Semester) - 2019

All the students of the Faculty of Science are requested to register for the above examination on or before 21.12.2020 by filling online form at the faculty website http://www.sci.jfn.ac.lk/. The examination timetable will be made available at the faculty website one month before the commencement of the End of Course Examinations.

(C-837)

Registrar

# சிதைவடைந்த வீதிகளை சீர்செய்யக் கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் காப்பெற் வீதிகள் அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில் சேதமடைந்த பல வீதிகள் உள்வாங்கப்படவில்லை. இது குறித்து குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆய்வு செய்து சேதமடைந்த வீதிகளுக்கு முன்னுரிமை வழங்கி அதனை சீரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று சாந்தசோலை கிராம அமை ப்புக்கள் கோரியுள்ளன.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியாவில் பல வீதிகள் காப்பெற் வீதிகளாக அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பாரிய சேதமடைந்து பொது மக்கள் பயணம் செய்ய முடியாதளவிற்கு சேதமடைந்த பல வீதிகள் கவனிப்பாரற்று கைவிடப்பட்டுள்ளன.

எனினும் போக்குவரத்து செய்யும் நிலையில் காணப்படும் வீதிகள் காப்பெற் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன என்பது கவலைக்குரியதாகும். பல ஆண்டுகளாக கிரவல் கூட இட்டு புனரமைப்புச் செய்யப்படாமல் சாந்தசோலை கிரேஷர் வீதி காணப்படுகின்றது.

இதனைச் சீரமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரியும் அது நடைபெறவில்லை.

எனவே சேதமடைந்த வீதிகளைச் சீரமைப்பதற்கு முன்வரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.(5-299)




# பாதுகாப்புக் கருதி அதிகாரிகளினால் வேறு இடத்திற்கு நகர்த்தப்பட்ட கால்நடைகள்



(முறிகண்டி)

கிளிநொச்சி கனகாம்பிகை குளக்கட்டில் மேய்ச்சலில் ஈடுபட்டிருந்த மாடுகள் வேறு இடத்திற்கு நகர்த்தப்பட்டுள்ளன.

நேற்று காலை குறித்த பகுதியில் கால்நடைகள் மேய்ச்சலில் ஈடுபடுவதாகவும் அதனால் குளக்கட்டு சேதமடையும் அபாயம் காணப்படுவது தொடர்பிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தகவலிற்கு அமைவாக குறித்த பகுதிக்கு விரைந்த அதிகாரிகள் கால்நடை உரிமையாளருடன் கலந்துரையாடி அப்பகுதியிலிருந்து கால்நடைகளை நகர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் குளங்கள் நிறைந்துள்ள நிலையில் அவற்றின் பாதுகாப்புத் தொடர்பில் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அதிக கரிசனை செலுத்தியுள்ளது.

இவ்வாறான நிலையில் குளத்தில் ஏற்படக்கூடிய கசிவு, குளக்கட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே குளக்கட்டில் மேய்ச்சலில் ஈடுபட்ட மாடுகளை வேறு இடத்துக்கு மாற்ற அதிகாரிகளால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை காலபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மேய்ச்சல் தரவை இல்லாது கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்கள் நீண்டகாலமாக தமக்கான மேய்ச்சல் தரவையை ஒதுக்கித்தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றபோதிலும் இன்று வரை தீர்வு எட்டப்படாதுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-100)

# தலைமன்னாரில் கரையொதுங்கியது "அமுத விஜி ஸ்ரெபானி" படகு

(மன்னார்)

தலைமன்னார் பியர் கடற்பரப்பில் மூழ்கிய நிலையில் கரையொதுங்கிய கண்ணாடியிழை படகு ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது.



நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை தலைமன்னார் கடல் பகுதிக்கு சற்று தொலைவில் நீரில் மூழ்கிய நிலையில் கரை ஒதுங்கி வந்த கண்ணாடி இழைப்படகினை அப்பகுதி மீனவர்கள் அவதானித்துள்ளனர்.

இந்த நிலையில் தலைமன்னார் பியர் பகுதி மீனவர்களால் குறித்த படகு மீட்கப்பட்டு தலைமன்னார் பியர் இறங்குதுறை பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டது.

குறித்த படகு தொடர்பில் மீனவர்கள் தலைமன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

மீட்கப்பட்ட படகில் "அமுத விஜி ஸ்ரெபானி" எனும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட படகு தற்போது தலைமன்னார் பியர் கடற்கரைப் பகுதியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடிக்கு முன் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள புரேவி புயல் தாக்கத்தின் எதிரொலியாக குறித்த படகு கடலில் மூழ்கி கரை ஒதுங்கி இருக்கலாம் என மீனவர்கள் தெரிவிக்கின்றனர். மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-285)

# 'கிளிநொச்சியில் பொது நூலகம்' ஆலோசனைக்குழு அங்குரார்ப்பணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொது நூலகம் அமைப்பதற்கான ஆலோசனைக் குழு நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச சபையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச சபையினால் 2021 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்படவுள்ள பொது நூலகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றது.


இதில் நூலகம் அமைப்பதற்கான ஆலோசனைக்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதில் முன்னாள் கல்வி அமைச்சரும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, பொறியியாளர் க.கடம்பசீலன், வைத்தியர்கள் மு.சிறீதர், குகராஜா, யோ. கௌதமன், திருலோகமூர்த்தி, சட்டத்தரணி ச.விஜயராணி அதிபர்களான பூலோகராஜா, கணேசன், ஜோயல் பியசீலன், சூரியகுமாரி, ஓய்வுநிலை அதிபர் இராஜேந்திரன், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன் விளையாட்டு உத்தியோகத்தர் ஆனந்தராஜா, கிளிநொச்சி வர்த்தக சங்கத்தின் தலைவர் விஜயசிங்கம் மற்றும் ஊடகவியலாளர் மு.விவேக், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் சத்தியானந்தன், தயாபரன், தவிசாளர் ஜீவராசா, ஆசிரியர் கனகலிங்கம், தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றியத்தின் தலைவர் நகுலேஸ்வரன் ஆகியோர் குறித்த குழுவில் அங்கம் பெற்றுள்ளனர்.

இக்குழுவின் ஆலோசனைக்கமைய கிளிநொச்சி பொது நூலகம் அமையப் பெறவுள்ளது.(5)

# முதிரைக்கடத்தல் முறியடிப்பு

## ஒருவர் கைது



(நெளுக்குளம்)

சட்டவிரோதமான முறையில் கடத்தி செல்லப்படவிருந்த முதிரைப் பலகைகளை வவுனியா குருமன்காடு பகுதியில் வைத்து நேற்று முன்தினம் புளியங்குளம் விசேட அதிரடிப் படையின் முறியடித்தனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பாலமோட்டையில் இருந்து முதிரைப் பலகைகள் கடத்தப்படவிருப்பதாக புளியங்குளம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து விசேட அதிரடிப் படையின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் அபயசேகரவின் வழிநடத்தலின் கீழ், புளியங்குளம் விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரியின் தலைமையிலான குழுவினரே குறித்த கடத்தலை முறியடித்தனர்.

இதன்போது 37 முதிரைப் பலகைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனத்தையும் கைப்பற்றியதோடு இக்கடத்தலுடன் தொடர்புடைய ஒருவரையும் கைது செய்து வவுனியா வனவள திணைக் களத்திடம் ஒப்படைத்தனர்.(5-299)



பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தினால் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கு தலா 1500 ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகள் துணுக்காய் உதவி பிரதேச செயலாளரிடம் நேற்று கையளிக்கப்பட்டன.(படம்:- முறிகண்டி செய்தியாளர்)

## இராசிபலன்

07.12.2020
கார்த்திகை 22, திங்கட்கிழமை
சப்தமி பிற்பகல் 3.34 மணிவரை
அட்டமி பிற்பகல் 3.35 மணிவரை
மகம் நண்பகல் 12.00 மணிவரை
சுபநேரம் 12.17 - 1.47 மணிவரை
இராகுகாலம் 7.47 - 9.17 மணிவரை
சந்திராஷ்டமம்:- திருவோணம், அவிட்டம்
ஆறுமுகநாவலர் குருபூசை வளவன்

**மேஷம்** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், புண்ணிய காரியங்க ளில் ஆர்வம் கூடும். தாழ்ந்த சுபாவமுண்டு, சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், எந்தக் காரி யத்தையும் எளிதில் செய்து வெற்றி காண் பீர்கள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கிடைக்கும்.

**மிதுனம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு வில குவர், சகோதார வழியில் ஒத்துழைப்புக் கள் கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உரு வாகும், இனிய செய்திகள் வந்து சேர லாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ் வீர்கள்.

**சிம்மம்** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள் சிந்தனை மிகுதியான நாள், திடீர் பயணங்கள் உருவாகும் வாய்ப்புண்டு.

**கன்னி** ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்ப டலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்ப டலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக் கலாம்.

**துலாம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, திடீர் பணவரவுகள் கிடை க்கும் வாய்ப்புண்டு, வழிபாடு ஆனந்தம் தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பம் கூடும் நாள்.

**விருச்சிகம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பொது நல ஈடுபாடு அதிக ரிக்கும், வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** வீண்பழிகள் அகல நடவடிக்கை எடுப்பீர் கள், தொழில் ரீதியான முக்கிய புள்ளிக ளைச் சந்திக்க முற்படுவீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற் சாகம் குறையலாம், தொழிலில் கவனத்து டன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.


**கும்பம்** குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறு வதற்கான அறிகுறி தோன்றும், தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மீனம்** மனதில் நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனு கூலமான நடந்து கொள்வர், ஆரோக் கியத்தில் முன்னேற்றமுண்டு, போசன சுகமுண்டு.

உன் உணர்வு உன் அறிவின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கட்டும்.

# கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு கொடுக்க வேண்டாம்

## திஸ்ஸ வேண்டுகோள்



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு கொடுத்து அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தயாராகியுள்ளதாக அறிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் அந்தத் தவறை செய்ய வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை, துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுகள், இராஜாங்க அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போது அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு கொடுத்து அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தயாராகியுள்ளதாக அறிந்துகொள்ள முடிகின்றது. இதில் 49 வீதம் இந்தியாவிற்கும், 51 வீதம் இலங்கைக்கும் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. தெற்கு முனையமும் 65 வீதம் இந்தியாவிற்கே வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அபிவிருத்திகளில் இலங்கைக்கு கிடைத்த இலாபம் ஒன்றுமே இல்லை. இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை இன்றும் நட்டத்தில் இயங்கிக்கொண்டுள்ளது. இந்நிலையில் துறைமுகங்களை வெளிநாடுகளுக்கு கொடுக்க வேண்டாம். குறிப்பாக கிழக்கு முனையம் இலங்கைக்கு கிடைத்துள்ள முக்கிய வளமாகும். அதனை இந்தியாவிற்கு வழங்க வேண்டாம்.

மேலும் துறைமுகத்தில் பணிபுரியும் ஊழியர்களில் 900 பேரளவில் கொரோனா வைரஸ்நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனால் துறைமுகம் முடக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கப்பல்கள் நெருக்கடிகளை சந்தித்துள்ளன. இதனால் இலங்கைக்கு வரும் கப்பல்கள் எண்ணிக்கை குறைவடையும் நிலைமை உருவாகியுள்ளது. பிரதான சர்வதேச நிறுவனங்கள் இலங்கை வருவதை தவிர்த்துள்ளனர். துறைமுகத்தின் கடன்கள் மாத்திரம் மொத்தக் கடன்களில் 24 வீதமாகும்.

இதில் இருந்து துறைமுகங்களை எவ்வாறு மீட்பது. அதற்கான வேலைத்திட்டம் என்ன என்பதை ஆராய வேண்டும். தற்காலிக வருமானங்களை கருத்தில் கொண்டு நீண்டகால நெருக்கடிகளைத் தீர்க்க முடியாது.

இப்போதும் கூட துறைமுகத்தில் வரும் வருமானத்தில் சூரியவெவ கிரிக்கெட் மைதானத்தை புனரமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இது நிதிமோசடியாகும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## 298 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 298 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதன்படி டுபாயிலிருந்து 169 பேரும் கட்டாரிலிருந்து 41 பேரும் சிட்னியிலிருந்து 38 பேரும் ஜப்பானின் நரிட்டோவிலிருந்து 50 பேரும் நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்தனர். விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் கொழும்பில் உள்ள பல தனியார் வைத்தியசாலையின் ஊழியர்களினால் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ)

## மௌலானா இராஜினாமா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலிசாஹிர் மௌலானா இராஜினாமா செய்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர், தனது இராஜினாமாக் கடிதத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கும் அதன் பிரதிய கட்சியின் செயலாளர் நிசாம் காரியப்பருக்கும் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## விவசாயிகள் காத்திருப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 500 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களுக்கு செல்ல அனுமதி தரவேண்டும் என கோரி நேற்று அதிகாலை 5 மணிமுதல் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத் திற்குட்பட்ட புட்டம்பை கிராமத்தில் அமைந்துள்ள இராணுவ சோதனை சாவடிக்கு முன்பாக பசளை மற்றும் கிருமிநாசினிகள் உள்ளிட்ட வாகனங்களுடன் காத்திருந்தனர்.

ஆனாலும் அவர்களுக்கான அனுமதி கொரோனா தொற்று அச்சம் காரணமாக சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கமைய இராணுவத்தினரால் மறுக்கப்பட்ட நிலையில் அரசாங்கம் எப்படியாவது தங்களுக்கு அனுமதி தரவேண்டும் என கூறி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசம் 11 ஆவது நாளாகவும் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக சுகாதாரத் துறையினரால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரையில் 171 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனை அடிப்படையாகக் கொண்டே சுகாதாரத்துறையினர் விவசாயிகளை வெளியேறாமல் தடுத்து வைத்திருப்பதாகவும் இதன்மூலம் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்த முயற்சி செய்வதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர். ஆனாலும் வேளாண்மை பயிரானது 60 நாட்களை கடந்த நிலையில் அறுவடைக்காக இன்னும் 40 நாட்களே உள்ளது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அதற்கான உரம் இடல் மற்றும் களை பிடுங்குதல், பூச்சிகளின் தாக்கத்திலிருந்து காப்பாற்ற களை நாசினி விசிறல் போன்ற செயற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் விவசாய செய்கையினை கைவிடவேண்டிவரும் எனவும் கவலை தெரிவித்தனர். (ஐ)

## 30 பேருந்துகள் ஓடாது

(கொழும்பு)

சுகாதார விதிமுறைகளை மீறி போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்ட, 30 பேருந்துகளின் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்துள்ளதாக பயணிகள் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார். நாடுபூராகவும் இவ்வாறான சுற்றிவளைப்புகளை கடுமை யாக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இவ்வாறு சுகாதார விதிமுறைகளை மீறும் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைஎடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# கொரோனா தொற்று முடிவுக்கு வருவதை நம் கண்முன்னே காணலாம்
# உலக சுகாதார நிறுவன தலைவர் நம்பிக்கை



**(நியூயோர்க்) கொரோனா வைரஸ் பெருந்தொற்று முடிவுக்கு வருவதை உலகம் கனவு காண தொடங்கலாம் என உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கூறியுள்ளார்.**

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தில் உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் இணையவழியில் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர், "கொரோனா வைரஸ் தடுப்பூசி சோதனைகளின் முடிவுகள் நம்பிக்கை தருவதாக அமைந்துள்ளன. எனவே கொரோனா வைரஸ் பெருந்தொற்று முடிவுக்கு வருவதை உலகம் கனவு காண தொடங்கலாம்" என கூறினார்.

மேலும், "கொரோனா தடுப்பூசி விநியோக நெரிசலில் ஏழைகளையும், ஓரங்கட்டப்பட்டவர்களையும் பணக்கார மற்றும் சக்தி வாய்ந்த நாடுகள் மிதித்து விடக்கூடாது" என கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து அவர் பேசும் போது, "கொரோனா வைரஸ் பெருந்தொற்று அதன் மிகச்சிறந்த மற்றும் மிக மோசமான பக்கத்தை மனித குலத்துக்கு காட்டி உள்ளது. இரக்கம், சுய தியாகத்தின் ஊக்கம் அளிக்கும் செயல்கள், விஞ்ஞானம் மற்றும் புதுமையின் மூச்சடைக்கக்கூடிய சாதனைகள் மற்றும் ஒற்றுமையின் இதயத்தை தூண்டும் நிகழ்வுகளையும் கூட காட்டியுள்ளது" என அவர் தெரிவித்தார். (நி)

# ரஷ்யாவில் ஸ்புட்னிக்-5 தடுப்பூசி விநியோகம் ஆரம்பமானது

(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் கொரோனா தடுப்பு மருந்தான ஸ்புட்னிக்-5 விநியோகம் ஆரம்பமானது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான தடுப்பூசியை தயாரிப்பதில் உலக நாடுகள் தீவிரம் காட்டி வரும் நிலையில், உலகின் முதல் கொரோனாத் தடுப்பூசியை உருவாக்கி பதிவு செய்து இருப்பதாக ரஷ்யா கடந்த ஓகஸ்ட் மாதம் அறிவித்தது.

ஸ்புட்னிக்-5 என அழைக்கப்படும் அந்த கொரோனா தடுப்பூசி, இந்தியாவிலும் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தடுப்பூசி கொரோனாவில் இருந்து மக்களைப் பாதுகாப்பதில் 92 சதவீதம் பயனுள்ளதாக இருக்கும் என்று ரஷ்யா அண்மையில் அறிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து ஸ்புட்னிக்-5 தடுப்பு மருந்தை தனது மகளுக்கு செலுத்திப் பார்த்து அதனால் அவர் நல்ல பயனடைந்ததாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்திருந்தார்.

தற்போது 70-க்கும் மேற்பட்ட ரஷ்ய வைத்தியசாலைகளில் இந்த தடுப்பு மருந்து ரஷ்ய அரசால் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அனைத்து நாடுகளைப்போல ரஷ்யாவும் முதலில் முதல்நிலை நோய்த் தடுப்பு பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்க முடிவு செய்துள்ளது. (நி)

# விஷவாயு தாக்கி 18 பேர் பலி சீனாவில் துயரம்

(பீஜிங்)

சீனாவில் நிலக்கரி சுரங்கத்தில் விஷவாயு தாக்கி 18 தொழிலாளர்கள் பரிதாபமாக சுருண்டு விழுந்து உயிரிழந்தனர்.

சீனாவின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள சிச்சுவான் மாகாணத்தின் யோங் சுவான் மாவட்டத்தில் தனியாருக்கு சொந்தமான நிலக்கரி சுரங்கம் ஒன்று உள்ளது.

இங்கு கடந்த வெள்ளிக்கிழமை மாலை வழக்கம் போல் பணிகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தன. 20-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நிலக்கரியை வெட்டி எடுக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

அப்போது சற்றும் எதிர்பாராத வகையில் சுரங்கத்துக்குள் காபனீ ரொக்சைட் வாயு அளவுக்கு அதிகமாக வெளியேறியது. தொழிலாளர்கள் அதனை சுவாசித்ததால் அவர்களுக்கு கடுமையான மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

சில விநாடிகளில் தொழிலாளர்கள் ஒவ்வொருவராக சுருண்டு விழுந்தனர். இந்த விபத்து குறித்த தகவல் கிடைத்ததும் பொலிஸார், தீயணைப்பு வீரர்கள் மற்றும் பேரிடர் மீட்பு குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

அவர்கள் உயிர்காக்கும் கருவிகளுடன் சென்று சுரங்கத்துக்குள் சிக்கிய தொழிலாளர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஆனால் அதற்குள் விஷவாயு தாக்கி 18 தொழிலாளர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களின் உடலை மீட்புக் குழுவினர் மீட்டனர். (நி)




# சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் நினைவு நாள் நேற்றாகும்

(டில்லி)


சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் 64ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதையொட்டி அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் அவருக்கு மரியாதை செலுத்தினர்.

விடுதலைக்குப் பின்னர் நாட்டின் முதலாவது சட்ட அமைச்சராக பதவி வகித்த டாக்டர் அம்பேத்கர், ஆசிரியராகவும், இதழாளராகவும், எழுத்தாளராகவும் சமூக நீதிப் புரட்சியாளராகவும் விளங்கியவர்.

இவருக்கு, இந்தியாவின் மிகச் சிறந்த உயரிய விருதான பாரத ரத்னா விருது, இவரது இறப்புக்குப் பின் 1990இல் வழங்கப்பட்டது. (நி)



புரேவி சூறாவளித் தாக்கம் காரணமாக கனமழை பெய்து வருவதால் தமிழகத்திலுள்ள உலக புகழ்பெற்ற சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குள் நேற்று முன்தினம் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளது. சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குள் கடந்த 40 ஆண்டுகளில் இந்த அளவுக்கு கோயிலுக்குள் மழை நீர் வந்தது இல்லை என தெரிவிக்கப்படுகிறது.




அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள 120 ஆண்டு பழைமை வாய்ந்த 19 ஆம் நூற்றாண்டு காலத்தை சேர்ந்த கிறிஸ்தவ தேவாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

# பொன்சேகா ஜனாதிபதியாகியிருந்தால் தமிழரின் நிலை அதோ கதிதான்

(மன்னார்)

இன்று தமிழ் மக்களைக் கஷ்டப்படுத்தும் சரத் பொன்சேகா, ஜனாதிபதியாகி இருந்தால் மக்களின் நிலை என்னவாகியிருக்கும் என்பதை நினைத்து நாம் அச்சப்ப்டுகின்றோம்" எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இவ்வாறு தெரிவித்தார்.

'வடக்கு, கிழக்கில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள புரேவி புயல், மாவீரர் தினத்தன்று வந்திருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன்'



என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா குறிப்பிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே செல்வம் அடைக்கலநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர்களைப் புண்படுத்தும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வரும் சரத் பொன்சேகாவுக்கு, ஜனாதிபதித் தேர்தலொன்றில் தமிழ் மக்கள்அதிகளவில் வாக்களித்தமை மனவேதனையளிக்கின்றது.

சரத் பொன்சேகாவின் கருத்து மிகவும் மோசமானது. அதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

விடுதலைப்புலிகளை அரசு எதிர்க்கின்றதுஎன்பது உண்மையாக இருந்தாலும், விடுதலைப்புலிகள்அமைப்பில் இறந்தவர்களை அனுஷ்டிக்க உறவினர்களுக்கு உரிமை உண்டு. மனிதாபிமானமுள்ளவரும் அதனை எதிர்க்கமுடியாது" என அவர் தெரிவித்தார். (நி-7)

# சிங்களவர்களுக்கு எதிராக உரையாற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்று வர தடைவிதிக்க வேண்டும்

(கொழும்பு)

சிங்களவர்களிற்கு எதிரான வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் உரைகளை நிகழ்த்தும் தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திற்கு வருவதை தடை செய்ய வேண்டும் எனவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

வார இதழ் ஒன்றுக்கு வழங்கியுள்ள பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் வெளிநாடுகளின் தலைவர்களின் பின்னால் சென்று ஜெனிவாவில் உள்நாட்டு விவகாரங்களை விவாதிப்பதற்கு பதில் ஏன் அவர்கள் அரசாங்கத்துடன் தங்கள் சமூகத்தின் பிரச்சினைகளை விவாதிக்கக்கூடாது எனும் கேள்விக்குப் பதில் அளித்த அவர்,

அது தவறு, அவர்கள் நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டிற்காக சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர். இலங்கையில் சமஷ்டியை அறிமுகப்படுத்துவது குறித்து அவர்கள் வேறு நாட்டுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வார்கள் என்றால் அது அவர்கள் மேற்கொண்ட சத்தியப்பிரமாணத்திற்கு முற்றிலும்விரோதமானது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தவறிழைத்து விட்டார் என நான் கருதுகின்றேன், அவர் தமிழ் அரசியல்வாதிகள் குறித்து அனுதாபமுள்ளவராகயிருந்துள்ளார் எனவும் ஹிட்லர் தோற்கடிக்கப்பட்டவேளை நாஜி அரசியல் கட்சி முற்றாக அழிக்கப்பட்டது, போல்பொட் கொல்லப்பட்டதை தொடர்ந்து அவரது கெமரூஜ் கட்சி காணாமல்போய்விட்டது.

சதாம் ஹுசைன் கொல்லப்பட்டதை தொடர்ந்து அவரது பாத்கட்சி அழிக்கப்பட்டது, ஹொஸ்னி முபாராக் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டதை தொடர்ந்து அவரது தேசிய ஜனநாயகக்கட்சிதடைசெய்யப்பட்டது.

இதேவேளை ஜனாதிபதியாகயிருந்த மகிந்த ராஜபக்ஷ செய்தது தவறு. அவர் தமிழ் அரசியல்வாதிகள் குறித்து அனுதாபம் கொண்டிருந்தார், அவர் அவர்களை மன்னித்தார், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை சாதகமாக பயன்படுத்துகின்றது.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளின் தலைவரின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்த பின்னரே பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்தார்கள்.

சிங்களவர்களிற்கு எதிரான வெறுப்புணர்வை வெளிப்படுத்தும் உரைகளை நிகழ்த்தும் தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்திற்கு வருவதைத் தடை செய்யவேண்டும் எனவும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (நி-7)

# மாணவர்களே போக்குவரத்து நெரிசலுக்கு காரணம்

(கொழும்பு)

பாடசாலைகளுக்கு அருகில் மாணவர்கள் வீதியை கடப்பதால், கொழும்பு உள்ளிட்ட சில நகரங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக, பெருந்தெருக்கள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சகல பிரதான நகரங்களிலும் உள்நுழையும் பிரதான பாதைகளின் இருமருங்கிலும்



பாடசாலைகள் காணப்படுவதாகவும் இதனால் வாகன நெரிசல் ஏற்படுவதாகத் தெரிவித்த அவர்,

சுரங்க வழி அல்லது சிறிய மேம்பாலங்களை அமைத்து இதன் மூலம் மாணவர்கள் வீதிகளை கடக்க நடவடிக்கை எடுப்பதன் ஊடாக வாகன நெரிசலை குறைக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# விடுதலை உணர்வையும் கொண்ட கொள்கையையும் எவராலும் அழித்துவிட முடியாது

## சரத் வீரசேகரவிற்கு பதிலடி கொடுத்த மாவை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளை அழித்ததைப்போன்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையும் இல்லாதொழிக்க வேண்டும் என்ற சரத் வீரசேகரவின் கருத்து மிகமோசமான சர்வாதிகார, இராணுவமய சிந்தனையின் வெளிப்பாடாகும் என தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் அவர் இவ்வாறு இறுமாப்புடன் பேசுவது பாரளுமன்றத்தில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என்பதையே வெளிப்படுத்துகிறது.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கினால் அதற்கு கூட்டமைப்பே பொறுப்புக்கூற வேண்டும் என சரத் வீரசேகர பாராளுமன்றில் தெரிவித்தார்.

அவருடைய கருத்து தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மாவை சேனாதிராஜா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

சரத்வீரசேகரவின் கருத்து மிகமோசமான சர்வாதிகார, இராணுவமய சிந்தனையின் வெளிப்பாடாகும். அவர் உலக வரலாற்றை அறியாமல் பேசுகின்றார்.

உலகநாடுகள் பலவற்றிலும் விடுதலைக்காகவும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகவும் இத்தகைய போராட்டங்கள் நடத்தப்பட்டிருப்பதுடன் அவற்றில் பல போராட்டங்கள் வெற்றியும் கண்டிருக்கின்றன.



இலங்கையில் தமிழினத்தின் உரிமைகளைப் பறித்து இராணுவத்தின் ஊடாக அவர்களை அடக்கியொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்கத்தினால் தமிழர்களின் அமைதிவழிப் போராட்டங்கள் அடக்கப்பட்டமையினாலேயே விடுதலைப் புலிகள் ஆயுதமேந்திப்போராடும் ஒரு மாபெரும் சக்தியாக இந்நாட்டில் உருவானார்கள்.

எனவே தமிழ்மக்களின் விடுதலை உணர்வினையும் கொள்கையினையும் சரத் வீரசேகரவினாலும் வேறு எந்தவொரு அரசாங்கங்களினாலும் அழித்துவிட முடியாது.

தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டிருக்கும் சரத் வீரசேகர, விடுதலைப்புலிகளை அழித்ததைப்போன்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையும் இல்லாதொழிக்க வேண்டும் என்று இறுமாப்புடன் பேசுவது அவர் பாராளுமன்றத்தில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என்பதையே வெளிப்படுத்துகிறது என அவர் தெரிவித்தார். (நி-7)

# இறந்த குரங்குகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

(கண்டி)

கண்டி நகருக்கு அருகில் உள்ள உடவத்தகெலே வன விலங்கு பூங்காவில் கடந்த சில நாட்களாக திடீரென அதிகளவான குரங்குகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குரங்குளுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் ஒரு வகையான நஞ்சு உடலில் பரவியுள்ளதாக தெரியவந்துள்ளது.

குறித்த பூங்காவில் பாரியளவிலான குரங்குகள் உயிரிழந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் குரங்குகளுக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருக்கலாம் என சந்தேகத்தில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதில் குரங்களுக்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை எனவும் உடலில் நஞ்சு பரவியதனால் உயிரிழந்துள்ளதாகவும் பேராதனை பல்கலைக்கழகத்தின் கால்நடை பீட அதிகாரி குறிப்பிட்டுள்ளார். (நி-7)

# கட்டுக்கடங்காத தொற்றாளர்கள் கட்டுப்படுத்துவது கடினம்

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**நாட்டில் பல மாவட்டங்களில் கட்டுக்கடங்காத வகையில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துள்ளனர். இவ்வாறான நிலைமை நீடித்தால் கட்டுப் படுத்துவது மிகவும் கடினமான விடயம் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் ஹரித் அளுத்கமகே எச்சரித்துள்ளார்.**

அதேவேளை கொரோனா வைரஸ் தொற்றினை கட்டுப் படுத்துவதற்கு அட்டளுகம போன்ற பிரதேசங்களின் மக்கள் வழங்கும் ஆதரவு மிகவும் குறைவாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறான பிரதேசங்களுக்கு தனிமைப்படுத்தலை மீறிச்சென்று பொலிஸார் ஊரடங்கு சட்டம் அமுல் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவ்வாறு செய்தால் சுகாதார ஊழியர்களுக்கு கண்காணிப்பை மேற்கொள்ள இலகுவாக இருக்கும்.

அவ்வாறு செய்யவில்லை என்றால் வைரஸ் பரவல் எங்கு சென்று முடியும் எனக் கூற முடியாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# பழைமைவாய்ந்த ஆலயத்தின் அம்மன் சிலை திருட்டு

(திருமலை)

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் சிறி நாககண்ணி அம்மன் ஆலயத்தில் வழிபட்டு வந்த கருமாரி அம்மன் சிலை கோயில் கூரையின் ஓடுகளை பிரித்து உள்நுழைந்தவர்களால் திருடப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையால் சேருநுவர பொலிஸில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த ஆலயமானது பழைமையான ஆலயமாகும்.

குறித்த ஆலயத்திலிருந்து தற்போது திருடப்பட்ட அம்மன் சிலையானது யுத்த காலத்தின்போது காணாமல் போய் இந்த வருடம் ஆலயத்தில் இடம்பெற்ற வைகாசி விசாக பூசையின் போது ஆலய வளாகத்தில் புதைக்கப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போதைப் பொருட்களுடன் நால்வர் கைது

(கொழும்பு)

மாரவில - தொடுவேவ பகுதியில் பெருமளவு போதைப் பொருட்களுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுவரி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் குறித்த போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, 100 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் 100 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், சந்தேகநபர்கள் பயன்படுத்திய கார் மற்றும் வான் உள்ளிட்ட வாகனங்களும் மதுவரித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பான விசாரணைகளும் தற்போதைய நிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# முன்னாள் அமைச்சர் காலமானார்



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் டி.பி. ஏக்கநாயக்க தனது 67 ஆவது வயதில் காலமானார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு சார்பில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்டு ஏக்கநாயக்க பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். கலாசார மற்றும் கலைத்துறை அமைச்சராக இவர் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2174

### மதி


அழகான பெண்களைப் பார்த்தால் உனக்கு என்ன தோன்றும்...




அவள் காலில் மெட்டி இருக்கிறதா என பார்க்க தோனும்...!

### குணால்

நீ கொடுக்கிற ஒரு கப் பாலுக்காக நான் எதெல்லாம் செய்ய வேண்டியிருக்கு...!



### சூர்யா


மனைவி பேச்சை கேட்காவிட்டால் கடைசியில் தான் ஜெயிக்க முடியும்...!



மனைவி பேச்சைக் கேட்டால் ஒரே பாட்டில் ஜெயித்து விடலாம்...!

### விமல்

நாடி, நரம்பெல்லாம் பாத்திரம் விளக்கும்...!




ஒருவரால் தான் இப்படி எல்லாம் செய்ய


### காயத்திரி

ஒரு முறையாவது இந்தப் பெட்டிக்குள் எட்டி பார்த்து விட வேண்டுமென்பது நமது சிறுவயது கனவு...!



### பானு

மாமனார் வீட்டில எவ்வளவு பொருளத்தான் இலையில வைச்சாலும்...!



உன் அப்பன் ரசம் வைச்சானா என்று மனைவியிடம் கேட்கிறவன் தான் மருமகன்..!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையோர்களுக்கு தண்டனை

## பாரபட்சமின்றி வழங்கப்படும் என்கிறார் நாமல்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணை சுமுகமாக இடம்பெற்று வருவதாகவும் இதனுடன்தொடர்புடைய அனைவருக்கும் பாரபட்சம் பார்க்காது தண்டனை வழங்கப்படும் என்றும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை சபையில், நிரோஷன் பெர்னாண்டோவின் உரைக்கு பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக எதிரணியினருக்கு தற்போது இருக்கும் அக்கறை, அன்றே இருந்திருந்தால் இத்தனை உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்காது.

எதிரணியை சேர்ந்தவர்கள் தான் கொழும்பு பேராயரை வெளிப்படையாகவே விமர்சித்தார்கள். இதனை எதிரணியினர் புரிந்துகொள்ள வேண்டும்.

எமது அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை எந்தவொரு பக்கச்சார்பும் இன்றி தற்போது நடத்திக் கொண்டுதான் இருக்கிறது.

இதனுடன் தொடர்புடைய அனைவரும் எந்தவொரு வேறுபாடும் இன்றி தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். இது எமது பொறுப்பாகும். இதற்கு எதிரணியினரும் ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

பேராயரை விமர்சித்தவர்களை கூட, எதிரணியினர் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றுக்கு வந்துள்ளார்கள். நாம் அவ்வாறு செயற்படவில்லை.

எனவே, இந்த விடயத்தில் எமது அரசாங்கத்தை சந்தேகம் கொள்ள வேண்டாம் என நாம் கேட்டுக் கொள்கிறோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# 1/4 போத்தல் மதுபானங்களுக்கு வைப்புக்கட்டணம் அறவிட தீர்மானம்



(கொழும்பு)

கால் போத்தல் மதுபானங்களுக்கு வைப்புக் கட்டணம் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் முன்வராத பட்சத்தில் கட்டாயமாக கால் போத்தலை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மதுபான விற்பனை நிலையங்களில் போத்தல்களை விற்பனை செய்யும்போது வைப்பீட்டு கட்டணம் அறவிடுவது தொடர்பில் சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீரவின் தலைமையில் மதுபான தயாரிப்பு நிறுவனம் மற்றும் கலால் ஆணையாளர் திணைக்கள அதிகாரிகளுடன் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கால் போத்தல் மதுபான பாவனையின் மூலம் சூழல் மாசடைந்திருப்பதாக சூழல் ஆர்வலர்கள் மற்றும் நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ள நிலையில், கால் போத்தல் மதுபானத்துக்கும் வைப்புக் கட்டணத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கால் போத்தல் மதுபானத்திற்காக பெறப்படுகின்ற வைப்புக் கட்டணமானது, வாடிக்கையாளர்கள் அந்த கட்டணத்தை மீண்டும் பெறத் தூண்டும் வகையிலான கட்டணமாக இருக்கவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் முன்வராத பட்சத்தில் கட்டாயமாக கால் போத்தலை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்துள்ளதுடன் நாட்டில் வருடாந்த போத்தல் உற்பத்தியானது 120 மில்லியனாவதுடன் அவற்றில் 18 - 20 மில்லியனுக்கும் இடைப்பட்ட அளவு போத்தல்கள் மதுபானத்திற்காக பயன்படுத்தப்படுவதாகவும் இவற்றுள் 60 வீதத்திற்கும் மேற்பட்டவை மீள் சுழற்சி செய்யமுடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பொருளாதார நெருக்கடியால் மக்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பேலியகொட மீகஹவத்தை பிரதேசத்தை சேர்ந்த மக்கள் நேற்று கட்டுப்பாடுகளை மீறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிறு பிள்ளைகளும் இவ் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பேலியகொட மீன்சந்தை மூடப்பட்டமையினால்தாம் பல பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.




ஆர்ப்பாட்ட இடத்திற்கு பேலியகொட பொலிஸ் பொறுப்பதிகாரி வந்து நிலைமையை கட்டுப்படுத்த முயற்சித்துள்ளார்.

எனினும் பிரதேச மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

இதன்போது 5000 ரூபாய் கொடுப்பனவு வழங்குவதாக பேலியகொட பொலிஸ் பொறுப் பதிகாரி உறுதியளித்துள்ளார். அதன் பின்னர் மக்கள் அவ்விடத்தை விட்டு சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புரந்தரதாசர்

கன்னட தேசத்திலே ஒரு ரத்தின வியாபாரி இருந்தார். அவர் பேர் நவகோடி நாராயணன். வசதிக்குக் குறைவில்லை. பெரிய கோடீஸ்வரர். பணம் தான் அவரிடமிருந்து தாராளமாக இருந்ததே தவிர மனம் இல்லை.

அடுத்தவர்கள் ஒரு உதவி என்று வந்து நின்றால் திரும்பி கூட பார்க்க மாட்டார். தான தருமம் எதுவும் செய்ய மாட்டார். இவர் தான் செய்யவில்லை என்றால் அடுத்தவர்களையாவது செய்ய விடலாம் அல்லவா, அதுவும் விட மாட்டார்.

அவர் சம்சாரம் லஷ்மி அம்மாள். அவர்களுக்கு மிகவும் தாராளமனது. யார் வந்து உதவி என்று கேட்டாலும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைக்கிறவர். இருந்தாலும் அவரையும் இவர் எதுவும் செய்ய விடுவதில்லை. அவர் மனதுக்குள்ளே மிகவும் சங்கடப் பட்டுக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் அந்த நவகோடி நாராயணன் தன்னுடைய கடையில் உட்கார்ந்து வியாபாரத்தை மும்மரமாக கவனித்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்திலே ஒரு வயதான பெரியவர் அவர் முன்னால் வந்து நின்றார். ஐயா! என் பெண்ணுக்கு கல்யாணம் மிகவும் கஷ்டமாக இருக்குது. நீங்கள் ஏதாவது கொஞ்சம் நிதி உதவி செய்தால் நல்லது என்றார்.

இவர் எப்படி கொடுப்பார்? அதெல்லாம் ஒன்றும் இல்லை போயிற்று வா... என்று சொன்னார். அந்த பெரியவர் உடனே கடையை விட்டு புறப்பட்டார். நேராக நவகோடி நாராயணன் வீட்டுக்குப் போய் நின்றார்.

அங்கே அந்த அம்மா அப்ப தான் துளசி பூஜை செய்து கொண்டிருந்தார். இந்தப் பெரியவர் தன்னுடைய நிலைமையை எடுத்துச் சொல்லி உதவி என்று கேட்டார். அந்த அம்மா உடனே தன்னுடைய வைர மூக்குத்தியை கழற்றிக் கொடுத்துவிட்டார்.

அதை வாங்கிக் கொண்டு அந்தப் பெரியவர் நேராக எங்கே போனார் தெரியுமா?

நவகோடி நாராயணன் கடைக்கு வந்தார் இந்த மூக்குத்தியை வைத்துக் கொண்டு பணம் கொடுங்க என்று கேட்டார். அவர் மூக்குத்தியை வாங்கிப் பார்த்தார். என்ன இது? இது நம்ம வீட்டு மூக்குத்தி மாதிரி தெரியுது...? என்று யோசித்தார். அந்த மூக்குத்தியை அங்கேயிருந்த ஒரு பெட்டியில் வைத்து பூட்டினார். ஐயா! பெரியவரே.. கொஞ்சம் நேரம் இப்படி உட்காருங்கள்.. இதோ வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு எழுந்து போனார். நேராக வீட்டுக்குப் போனார்.

லஷ்மி இங்கே வா என்றார். எங்கே உன் மூக்குத்தி என்று கேட்டார். இன்றைக்கு எண்ணெய் தேய்த்து குளித்தேன். அது தான் கழற்றி வைத்திருக்கின்றேன் என்றார்.

எங்கே வைத்திருக்கின்றாய். எடுத்துக் கொண்டு வா பார்க்கலாம் என்றார். அந்த அம்மாவுக்கு பயமாகிவிட்டது. என்ன செய்வது என்று தெரியவில்லை. துளசி அம்மனே நீ தான் துணை என்று வேண்டிக் கொண்டு போய் பெட்டியை திறந்தார்.

அங்கே பார்த்தால் மூக்குத்தி இருக்கின்றது. உடனே அதை எடுத்துக் கொண்டு வந்து கணவனிடம் கொடுத்தார். நவகோடி நாராயணன் பார்த்தார். உடனே திரும்பி கடைக்கு வந்தார். பெரியவரையும் காணவில்லை... பெட்டியிலே வைத்திருந்த மூக்குத்தியையும் காணவில்லை.

அவருக்கு ஒரே ஆச்சரியம். மனைவி கொடுத்த மூக்குத்தியை மறுபடியும் எடுத்துப் பார்த்தார். அப்பொழுது அதிலே ஒரு காட்சி தெரிந்தது. பாற்கடலில் நாராயணன் ஆதிசேஷன் மேலே படுத்திருக்கின்றார். எதிரிலே நாரதர் நிற்கிறார். அந்த நாரதர் தான் தான் என்கின்ற உணர்வு நவகோடி நாராயணனுக்கு ஏற்படுகின்றது. அவ்வளவு தான் உடனே வீட்டை அப்படியே திறந்து போட்டு விட்டு மனைவியை அழைத்துக் கொண்டு பண்டாரிபுரம் கிளம்பிவிட்டார்.

போவதற்கு முன்னர் எங்கள் சொத்துக்களையெல்லாம் ஏழை எளியவர்களிடம் கொடுத்துவிட்டு போவோமே என்றார்கள். அப்படிசெய்யக் கூடாது என்றார் அவர். இது முன்னாடியும் அப்படி தான் சொன்னீர்கள்.. இப்பவும் அப்படியே சொல்கின்றீர்கள் என்றார். முன்னாடி அந்த சொத்து என்னுடையது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதனாலே யாருக்கும் கொடுத்துவிடக் கூடாது என்று சொன்னேன்.

இப்பொழுது எப்படி என்றால் அந்த சொத்து என்னுடையது இல்லை. பண்டாரிநாதனுடையது என்பதை தெரிந்து கொண்டேன். அதனாலே அதை யாருக்கும் கொடுப்பதற்கு நமக்கு என்ன உரிமை ? என்று சொல்லிவிட்டு புறப்பட்டுவிட்டார். அப்படி புறப்பட்ட அந்த நவகோடி நாராயணன் யார் என்று நினைக்கின்றீர்கள்?

அவர் தான் பின்னால் புரந்தரதாசராக மாறி நிறைய கீர்த்தனைகள் எல்லாம் எழுதினார். அவர் கதை அப்படி என்றால் எங்கள் கதை வேறு மாதிரி இருக்கு. எங்கள் ஆள் ஒருத்தர் வந்தார். சேர் எங்க வீட்டுக்கார அம்மாவும் ஒரு நாள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காக மூக்குத்தியை கழற்றி ஒரு பெட்டி யிலே வைத்திருந்தார். மறுபடியும் திறந்து பார்த்தபொழுது அது காணாமல் போய்விட்டது சேர் என்றார்.

ஐயையோ பின்பு என்ன ஆகிவிட்டது என்றேன்.

கடவுளை வேண்டிக்கொள் கிடைத்து விடும் என்றேன். அதே மாதிரி செய்தார். ஒரு மாதம் கழித்து மறுபடியும் ஒரு நாள் திடீர் என்று அந்த பெட்டியிலேயே அது வந்துவிட்டது சேர் என்றார்.

ஆச்சரியமா இருக்கே...என்றேன். இதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை யே என்றார். எப்படி என்றேன். அந்த மூக்குத்தியை நான் தான் எடுத்து ஒரு அவசரத்தேவைக்கு அடகுக் கடையில் வைத்திருந்தேன் என்றார். அவர் புரந்தரதாசர். இவர் மனைவிக்கு நிரந்தரதாசர்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

13

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### 1.உத்தியோகபூர்வ சத்தியப்பிரமாணம்

புதிய உறுப்பினர் ஒருவரால் செய்யப்படும் உத்தியோகபூர்வ சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணம் இது சபாநாயகரினால் நடத்தி வைக்கப்படும்.

### 2. ஜனாதிபதியின் செய்திகள்

ஜனாதிபதியிடமிருந்து வந்த செய்திகள் சபாநாயகரால் அல்லது பிரதிச் சபாநாயகரால் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளரால் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினரால் வாசிக்கப்படும்.

### 3. சபாநாயகரின் அறிவித்தல்கள்

சட்ட மூலங்கள் பற்றிய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள், சட்ட மூலங்களின் உறுதிப்படுத்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் மரணம், தவிசாளர் குழாமில் உள்ள உறுப்பினர்களின் பெயர்கள், குழுக்களின் நியமனம் போன்ற பாராளுமன்றத்துடன் தொடர்புடைய அனைத்து விடயங்கள் பற்றிய அறிவித்தல்களும் சபாநா கரால் மேற்கொள்ளப்படும்.

### 4. பத்திரங்கள் சமர்ப்பித்தல்

சபாநாயகரால் அல்லது ஓர் அமைச்சரால் அல்லது ஒரு பிரதி அமைச்சரால் மட்டுமே பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட முடியும்.

### 5. குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

பாராளுமன்றக் குழுக்களின் அறிக்கைகளை அந்தந்தக் குழுக்களின் தவிசாளர் சமர்ப்பிப்பார். ஆலோசனைக் குழுக்களின் அறிக்கைகள் அந்தந்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் சமர்ப்பிக்கப்படலாம்.

### 6.மனுக்கள்

பிரஜைகள் தமது நிர்வாக ரீதியான இடர்ப்பாடுகளுக்குப் பரிகாரம் தேட, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரூடாகப் பாராளுமன்றத்திற்கு மனுக்கள் சமர்ப்பிக்கலாம். அவ்வாறான மனுக்கள் பரிசீலனைக்காகப் பொது மனுக்கள் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும்.

### 7.கேள்விகள்

கேள்வி நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதம அமைச்சரிடமோ அல்லது யாரேனும் ஓர் அமைச்சரிடமோ பொது விடயங்கள் தொடர்பாக குறித்த அமைச்சின் கீழ்வரும் விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் வாய்மூல வினாக்களை முன்வைக்கலாம். உறுப்பினர் ஒருவர் நாளொன்றுக்கு மூன்று வாய்மூல வினாக்களை மட்டுமே கேட்கமுடியும். வினாவுக்கான நேரம் பி.ப. 01.00 முதல் பி.ப. 02.00 வரையாகும்.

### 8. அனுதாபப் பிரேரணைகள்

மரணமடையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்து அனுதாபப் பிரேரணைகளை நிறைவேற்றும் பொருட்டுச் சபையினில் ஒரு நாளை ஒதுக்குவது பாராளுமன்ற நடைமுறையாகும். அனுதாபப் பிரேரணைகளுக்குக் குறித்த கால எல்லை எதுவும் கிடையாது.

### 9.சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணைகள்

தொடர்ச்சியாக மூன்று மாத காலத்திற்கு விடுப்பை வேண்டும் யாரேனும் ஓர் உறுப்பினர் அதற்கான சபையின் அனுமதியைப் பெறவேண்டும். அரசியலமைப்பின் உறுப்புரை 66(ஊ) இன் கீழ், சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணையொன்று குறித்த உறுப்பினரின் வேண்டுகோளின் பேரில் யர்ரேனும் ஓர் உறுப்பினரால் சபையில் பிரேரிக்கப்படலாம். இப்பிரேரணை அமைச்சர் ஒருவரால் சபையில் பிரேரிக்கப்படாதவிடத்து, வழிமொழியப்படல் வேண்டும்.

### 10. அமைச்சு சம்பந்தமான கூற்றுக்கள்

பொது முக்கியத்துவம் மற்றும் கொள்கை தொடர்பான விடயங்கள் பற்றியும், தமக்குப் பொறுப்பளிக்கப்பட்ட அமைச்சு சம்பந்தமாக, சபையில் முன்வைக்கப்பட்ட தவறான தகவல் ஒன்றை சபையின் முன் திருத்துவதற்கும் அமைச்சு சம்பந்தமான கூற்றுக்கள் அமைச்சர்களால் விடுக்கப்படும்.

அமைச்சு சம்பந்தமான இக் கூற்றுக்களை மேற்கொள்ள சபாநாயகரின் முன் அனுமதி தேவை. கூற்றினை விடுக்கும் வேளையில் கேள்விகள் எதுவும் அனுமதிக்கப்படமாட்டா. ஆனால் அடுத்து வரும் ஒரு தினத்தில் இது பற்றிய விவாதமொன்றுக்கு அனுமதியளிக்கப்படலாம்.

### 11. தனிப்பட்ட விளக்கங்கள்

சபையில், தனக்கெதிரான குற்றச்சாட்டொன்று கொண்டுவரப்படுகையில் அல்லது பாராளுமன்ற நிகழ்வு பத்திரிகையில் தவறான விதத்தில் அறிக்கை செய்யப்படுகையில், எவரேனும் ஓர் உறுப்பினர் தனிப்பட்ட விளக்கமொன்றை அளிக்க முடியும்.

தனிப்பட்ட விளக்கங்கள் பாதிக்கப்பட்ட உறுப்பின ரால் நேரடியாக அளிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறான விளக்கங்கள் அளிக்கப்பட முன்னர், உறுப்பினர்கள் சபாநாயகரின் அனுமதியைப் பெறவும் வேண்டும்.

### 12. சிறப்புரிமைக் கேள்விகள்

22ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் உறுப்பினர் ஒருவர் உரிய அறிவித்தலை சபாநாயகரிடம் அளித்ததன் பின்னர் சிறப்புரிமை விடயம் ஒன்றைச் சபையில் எழுப்பலாம். ஆயினும் பாராளுமன்ற சிறப்புரிமைகள் குறித்த அவசர பிரேரணையொன்று மற்றெல்லா அலுவல்களையும் விட முன்னிலை வகிக்கும். சிறப்புரிமை விடயமொன்றை எழுப்புவதற்காக சபையின் நடைமுறைகள் எந்த ஒரு நேரத்திலும் குறுக்கீடு செய்யப்படலாம்.

### 13.பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான முன்னறி வித்தல் தேவைப்படாத பிரேரணைகள்

அமர்வு நேரங்களில் மாற்றம் செய்தல், நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தல் மற்றும் சிறப்புரிமை விடயமொன்றைச் சிறப்புரிமைகள் குழுவுக்கு சமர்ப்பித்தல் போன்ற பிரேரணைகளுக்கு முன் அறிவித்தல் தேவையில்லை. அத்துடன் அவ்வாறான பிரேரணைகள் பாராளுமன்றச் சபைத் தலைவரால் அல்லது அரசாங்க முதற் கோலாசானால் அல்லது அமைச்சரவை அமைச்சர் ஒருவரால் பிரேரிக்கப்படவேண்டும்.

### 14.பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான முன்னறிவித்தல் தேவைப்படும் பிரேரணைகள்

பொதுவாக, பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலங்களுக்கு அறிவித்தல் தேவை. அரசாங்கச் சட்ட மூலங்கள் தனியார் உறுப்பினர் சட்டமூலங்களுக்கு முன்னதாகச் சமர்ப்பிக்கப்படும்.

### 15. பொது அலுவல்கள்

அறிவித்தல் வழங்கப்பட்டதும் குறித்த ஒரு தினத்திற்கான ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டதுமான அனைத்து விடயங்களும் "பொது அலுவல்களில்" அடங்கும். சட்ட மூலங்கள், பிரேரணைகள், ஒழுங்கு விதிகள், குறைநிரப்பு மதிப்பீடுகள் மற்றும் தனியார் உறுப்பினர் சட்ட மூலங்கள் போன்றவை இவற்றில் அடங்கும்.

### பாராளுமன்றக் கூட்ட அறிக்கைகள்

ஒவ்வொரு அமர்வு நாளின் போதும் பாராளுமன்றத்தில் நடைபெறுவனவற்றின் உத்தியோகபூர்வ பதிவே கூட்டறிக்கை ஆகும். இது சபையினுள் நடைபெறும் அனைத்து நடவடிக்கைகளினதும் சாராம்சமாக இருப்பதோடு சபை ஆவண அலுவலகத்தினால் மும் மொழிகளிலும் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படுகிறது. (உரு-6 ஐப் பார்க்க)

### பாராளுமன்றக் கேள்விகள்


பாராளுமன்றத்தில், தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ள அழுத்தம் கொடுப்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் அமைச்சரொருவரிடம், கேள்வி கேட்கப்படுகின்றது இது நாட்டின் முழு நிருவாகத்தையும் உள்ளடக்குவதோடு அதன் வீச்சு வெளிநாட்டு உறவுகள் தொடக்கம் பணித்துறை ஆட்சியின் தனிநபர் வரை காணப்படும். (உரு-7 ஐப் பார்க்க)

### பாராளுமன்ற கேள்வியொன்று பெறப்படும் போது

திகதி முத்திரை இடப்பட்டு சபை ஆவண அலுவலகத்தின் தலைவரினால் புறக்குறிப்பிப்படுதல் வேண்டும். ஒவ்வொரு கேள்வியும் நடப்பு ஆண்டைக் குறிக்கும் இலக்கத்துடன் பதிவு செய்யப்படும். பதிவுசெய்யப்பட்ட கேள்வி கணனி இயக்குநரினால் கணனி தட்டச்சில் பொறிக்கப்படும். பின்னர், 36ஆம் இலக்க நிலையியற் கட்டளையிலுள்ள விதிகளின் பிரகாரம் கேள்வி திருத்தியமைக்கப்படும்.

திருத்தியமைக்கப்பட்ட கேள்வி அங்கீகாரத்துக்காக உதவிச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட கேள்விகள் பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவதற்காக பாராளுமன்ற பிரதம உரைபெயர்ப்பாளருக்கு அனுப்பப்படும் மொழிபெயர்க்கப்பட்ட கேள்விகள் கணனி இயக்குநரினால் கணனி தட்டச்சில் பொறிக்கப்படும்.

உரு-6



(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2]

**பாராளுமன்றக் கூட்ட அறிக்கை**

2020 ஆகஸ்ட் 21, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

**சமூகமளித்தோர்:**

**மஹிந்த யாப்பா அபேவர்தன**, சபாநாயகர்

**ரன்ஜித் சியம்பலாபிடிய**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

(தொடரும்)

## அதிகரிக்கும் வாகன விபத்துக்கள்

# நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி

**(கொழும்பு)**

**வாகன விபத்துக்களினால் பாதிக்கப்படும் நூற்றுக்கணக்கானோர் நாளாந்தம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுவதாக வைத்தியசாலையின் சிரேஷ்ட தாதி அதிகாரி புஷ்பா ரம்யாணி தெரிவித்துள்ளார்.**

அதிக வேகம், மது அருந்துதல் மற்றும் கவனயீனமாக வாகனத்தைச் செலுத்துகின்ற விடயங்களே பெரும்பாலும் இவ்வாறான விபத்துக்களுக்குக் காரணமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில் வாகனங்களைச் செலுத்தும் சந்தர்ப்பங்களில் மது அருந்த வேண்டாம் எனவும் ஆசனப்பட்டிகளை பொருத்திக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன் வாகனங்களைச் செலுத்தும் சந்தர்ப்பத்தில் கோபங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ஜ)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## அபிஷேக பலன்கள்

*(தொடர்ச்சி)*

*திருமலையில் ஏழுமலையானுக்கு வெள்ளி தோறும் அதிகாலையில் நடக்கும் அபிஷேகம் பிரமிக்கத்தக்க வகையில் இருக்கும். ஸ்பெயின் நாட்டு குங்குமப்பூ, நேபாள நாட்டு கஸ்தூரி, சீனாவில் இருந்து வரும் புனுகு, பிரான்சில் இருந்து வரும் வாசனைத் திரவியங்களைக் கொண்டு அபிஷேகம் செய்வார்கள்.*

*முதலில் புனுகு தைலம் தடவி அபிஷேகத்தை தொடங்குவார்கள். பாராயணம் முழங்க சுத்தமான தண்ணீர், பசும்பால் கொண்டு அபிஷேகம் நடத்து வார்கள். 51 வட்டில் பசும்பால் இதற்கு பயன்படுத்தப்படும். ஏழுமலையான் அபிஷேகத்தில் தயிர், தேன், இளநீர் போன்றவை பயன்படுத்தப்படுவதில்லை. வாசனைத் திரவியங்கள்தான் அதிகளவில் இடம் பெற்றிருக்கும். இந்த அபிஷேகத்துக்கு சுமார் ரூ.1 இலட்சம் வரை செலவாகும். இந்த அபிஷேகம் செய்ய பணம் கட்டினால் பல மாதங்கள் கழித்தே அபிஷேகத்தை காணும் வாய்ப்புக் கிடைக்கும். வைணவத் தலங்களில் ஆஞ்சநேயருக்கு நடத்தப்படும் பால் அபிஷேகம் ஏராளமான பலன்களை வாரி வழங்கக் கூடியதாகும். சக்தி தலங்களில் செய்யப்படும் அபிஷேகங்களை நம் மனதில் நிறைவை உண்டாக்கும். அது அம்பாள் தாயாரின் மனதை குளிர்ச்சி அடைய செய்யும்.*

*அதுபோல முருகப் பெருமானுக்கு ஒவ்வொரு தலத்துக்கு ஏற்ப அபிஷேகங்கள் விதம்விதமாக நடத்தப்படுகின்றன. பழனியில் உள்ள முருகர் சிலை 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மூலிகைகளால் 81 சித்தர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டதாகும். தினமும் பழனி முருகனுக்கு 6 தடவை அபிஷேகம் செய்யப்படுகிறது. நல்லெண்ணெய், பஞ்சாமிர்தம், சந்தனம், விபூதி ஆகிய 4 பொருட்கள் மட்டுமே அபிஷேகத்துக்கு பயன்படுத்தப்படுகிறது. முருகன் கையில் வைத்திருக்கும் வேலுக்கு அபிஷேகம் செய்தால் செவ்வாய் தோஷம் நீங்கும் என்பது ஐதீகம். இரண்டு நாகங்கள் இணைந்தது போல் இருக்கும் நாகராஜா சிலைக்கு வெள்ளிக்கிழமை பகல் ராகு காலத்தில் (10.30-12.00) மஞ்சள், குங்குமம் வைத்து செவ்வரளி பூ சாற்றி அபிஷேகம் செய்தால் கணவன் - மனைவி இடையே அன்பு பெருகும். ஒற்றுமையுடன் அந்நியோன்யமாக வாழ்வார்கள். முழு முதற் கடவுளான விநாயகரின் மனதை குளிர வைக்கவும் ஏராளமான அபிஷேகங்கள் உள்ளன. அரச மரத்தடியில் மேற்கு நோக்கி இருக்கும் விநாயகரை பூச நட்சத்திரத்தன்று அன்னாபிஷேகம் செய்து வழிபட்டால் தொழிலில் இலாபம் பெருகும்.*

*வேப்ப மரத்தடியில் கிழக்கு திசை நோக்கி இருக்கும் விநாயகரை உத்திரட்டாதி நட்சத்திரத்தில் அபிஷேகம் செய்து பஞ்ச தீபம் ஏற்றி வழிபட்டால் மனதுக்கு விரும்பியபடி திருமணம் நடைபெறும். புன்னை மரத்தடி விநாயகரை ஆயில்ய நட்சத்திரத்தன்று இளநீர் அபிஷேகம் செய்து வழிபட்டால் தம்பதியர் ஒற்றுமை ஓங்கும்.*

*மகிழ மரத்தடி விநாயகருக்கு அனுஷம் நட்சத்திரத்தன்று மாதுளம் பழ அபிஷேகம் செய்தால் பில்லி, சூனியம், தீய வினைகள் திருஷ்டி அகன்று விடும். ஆல மரத்தடியில் வடக்கு நோக்கி இருக்கும் விநாயகருக்கு மகம் நட்சத்திரத்தன்று அபிஷேகம் செய்து வழிபட்டால் நோய்கள் நீங்கும்.*

*மாமரத்தடி விநாயகருக்கு விபூதி அபிஷேகம் செய்து வழிபட்டால் எதிரிகள் தொல்லை நீங்கும். வன்னி மரத்தடியில் உள்ள விநாயகருக்கு அவிட்ட நட்சத்திர தினத்தன்று நெல் பொரி கொண்டு அபிஷேகம் செய்து வழிபட்டால் தடைப்படும் திருமணங்கள் கை கூடும். பிரிந்த தம்பதிகள் ஒன்று சேருவார்கள். (தொடரும்)*

## செய்தித்துளிகள்

# 45 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதி முறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் மேலும் 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 5 மணியுடன் நிறைவடைந்த காலப் பகுதியில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் ஆயிரத்து 172 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்படுபவர்களை தொடர்ந்தும் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, கைது செய்யப்படும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ)

# பொருளாதார மத்திய நிலையம் மூடல்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அச்ச நிலைமை காரணமாக வெயாங்கொடை பொருளாதார மத்திய நிலையம் மூடப்பட்டுள்ளது.

வெயாங்கொடை பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் சிலர் உட்பட மேலும் 9 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கம்பஹா மாவட்ட அரசாங்க அதிபர் சுனில் ஜயலத் தெரிவித்துள்ளார்.

இதன்காரணமாக சுமார் 363 பேருக்குபி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக வெயாங்கொட பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே திஹாரிய பகுதியைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் வெயாங்கொட பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை தெரியவந்துள்ளது. (ஜ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 260 | 240 | 240 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 240 | 300 |
| தக்காளி | 120 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 80 | 50 |
| கோவா | 60 | 60 | 80 | 80 |
| கரட் | 140 | 240 | 240 | 250 |
| பூசணி | 80 | 100 | 80 | 100 |
| புடோல் | 140 | 160 | 100 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 240-360 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 170 | 180 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 340 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 90 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 120 | 120 |
| பயற்றங்காய் | 300 | 350 | 400 | 420 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 100 | 120 | 140 | 160 |
| கறிமிளகாய் | 300 | 350 | 320 | 240 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 260 | 240 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 240 | 220 |
| கீரை - 1 பிடி | 60 | 40 | -- | 80 |
| தேசிக்காய் | 200 | 150 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 300 | -- | 240 |
| வெங்காயப்பூ | 300 | 350 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 80 | -- | 160 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 100 | -- | 120 |




## முல்லா அணைத்த நெருப்பு



ஒரு தடவை முல்லா வியாபார விடயமாக வெளியூர் சென்றிருந்தார்.

வியாபார அலுவல்கள் முடிந்து பிறகு அன்று இரவுப் பொழுதைக் கழிப்பதற்காக ஒரு விடுதியில் தங்கினார்.

மிகவும் சாதாரணமாக உடையணிந்திருந்த முல்லாவை விடுதி வேலைக்காரர்கள் கொஞ்சமும் மதிக்கவில்லை. சரியானபடி உபசரிக்கவில்லை.

இரவு திடீரென அவருக்குத் தண்ணீர் தாகம் எடுத்தது.

வேலைக்காரர்களைக் கூப்பிட்டு தமக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று கேட்டார். வேலைக்காரர்களோ அவரைக் கொஞ்சமும் கவனம் செலுத்தவில்லை. கும்பலாக அமர்ந்து கதை பேசிக் கொண்டிருந்தனர்.

முல்லாவுக்கோ நாவறட்சி அதிகமாக இருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தார். அவருக்கு யோசனையொன்று தோன்றியது.

திடீரென அவர் " நெருப்பு, நெருப்பு, நெருப்பு பற்றிக் கொண்டு விட்டது" எனக் கூக்குரல் போட்டார்.


வேலைக்காரர்கள் பதறியடித்துக் கொண்டு ஆளுக்கு ஒரு குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

முல்லாவைப் பார்த்து " எங்கே தீப்பற்றிக் கொண்டது?" என்று பரபரப்புடன் கேட்டார்கள். முல்லா சாவதானமாக ஒரு குவளையை எடுத்து அவர்கள் கொண்டு வந்திருந்த குடம் ஒன்றிலிருந்து நீரை எடுத்து வயிறாரக் குடித்தார். அவர் தாகம் அடங்கியது.

“நெருப்பு பற்றிக் கொண்டதாகச் சொன்னீரே எங்கே?" என்று வேலைக்காரர்கள் கேட்டார்கள். நெருப்பு என் வயிற்றில்தான் பற்றிக் கொண்டு எரிந்தது. இப்போது தண்ணீர் விட்டு அணைத்து விட்டேன் என்று கூறிவிட்டுச் சிரித்தார் முல்லா.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## அரியணையில் அலெக்சாண்டர்



தீப்ஸ் நகரம்

எல்லாம் புதிதாக இருந்தது அலெக்சாண்டருக்கு. வைரம் பதிக்கப்பட்ட கிரீடம். பாரம்பரிய ஆடை அலங்காரங்கள், கூடுதல் மரியாதை.

எல்லாமே முன்பை விடக் கூடுதல். இளவரசர் மன்னராகி விட்டார் என்பதற்கான சாட்சியங்கள்.

கட்டுமஸ்தான உடல், உருண்டு திரண்ட தோள்கள், முறுக்கேறிய கரங்கள், தினவெடுத்த கால்கள், பொலிவு நிறைந்த முகம், மன்னருக்குரிய அத்தனை அம்சங்களும் அலெக்சாண்டருக்கு அமைந்திருந்தன.

நிர்வாகம் அவருக்குப் புதிதில்லை. ஏற்கனவே ஆட்சி, நிர்வாகம் போன்ற விடயங்களைத் தந்தை பிலிப் கொடுப்பதற்கு முன்பாக தானே அட்சதை போல எடுத்து தலையில் போட்டுக் கொண்டு காரியங்களில் இறங்கியிருந்தவர்தான்.

இருந்தாலும் தளபதிகள், அமைச்சர்கள், பொதுமக்கள் எல்லோரும் தன்னிடம் சங்கோஜமில்லாமல் நடந்து கொள்வார்களா? என்பதில் அவருக்குக் குழப்பம் இருந்தது. எல்லாம் சரியாகிவிடும் என்கிற நம்பிக்கையும் இருந்தது.

மாசிடோனியா மக்கள் மீது அவருக்கு ஒரு கவலை இருந்தது. கவலை என்று கூட சொல்ல முடியாது. ஒரு எதிர்பார்ப்பு.

எப்படி நடந்து கொள்வார்கள்? அலட்சியம் செய்வார்களா? அல்லது மன்னர் பிலிப்பின் மகன் என்பதால் கொஞ்சம் அடக்கி வாசிப்பார்களா? தந்தை இல்லை, இவனால் என்ன செய்து விட முடியும் என்று எக்காளம் இடுவார்களா? அல்லது மேடிநாட்டு வெற்றியை நினைத்துக் கொஞ்சம் பயப்படுவார்களா?

நிறையக் கேள்விகள் கேட்டுக்கொண்டார் அலெக்சாண்டர். ஒரு வேளை போர், யுத்தம் என்று வந்துவிட்டால்? கலவரம் செய்ய யாராவது கிளம்பிவிட்டால்? வரட்டும். வந்து பார்க்கட்டும்.

அதற்காகத்தானே காத்துக் கொண்டிருக்கின்றேன். வாய்ப்பு ஏற்படாதவரைக்கும் வீரன் என்று எப்படித்தான் மற்றவர்களுக்குப் புரிய வைக்க முடியும்? மனத்துக்குள் சொல்லிக் கொண்டார் அலெக்சாண்டர்.

இது ஒரு பக்கம் இருக்க தந்தை பிலிப்பின் ஆட்சியில் மாசிடோனிய மக்கள் எந்த அளவுக்கு பாதுகாப்பாக இருந்தார்களோ அல்லது பாதுகாப்பாக உணர்ந்தார்களோ அதில் இம்மியளவும் குறைந்து விடக்கூடாது என்பதிலும் அவர் உறுதியாக இருந்தார். (தொடரும்)

நீங்கள் நாய்க்கு ஒரு பிடி சோறு போடும்போது, அந்த நாயைக் கடவுளாகப் பாவித்து வழிபடுங்கள். அந்த நாயினுள்ளே கடவுள் இருக்கிறார்! அவரே எல்லாமுமாய் இருக்கிறார்.
– விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தங்குமிடம் கொடுத்தும் உண்டி கொடுத்தும் உதவுங்கள்

வடக்கில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனத்த மழை காரணமாக ஏற்பட்டுள்ள பேரனர்த்தம் மக்களின் இயல்பு வாழ்வைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் பெய்து வரும் கடும் மழையால் எங்கும் வெள்ளக்காடாகியுள்ளன.

குடிமனைகள், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணப் பேருந்து நிலையம், வர்த்தக நிலையங்கள் என எங்கும் வெள்ளம் புகுந்து அனர்த்தம் விளைவித்துள்ளது.

இவ்வாறான வெள்ள அனர்த்தத்தை எங்ஙனம் சமாளிப்பது என்ற ஆய்வுகளில் அரச நிர்வாகம் ஈடுபட்டிருக்கின்றதாயினும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் உடனடியாகத் தங்குவதற்கு இருப்பிடமும் உணவும் வழங்குகின்ற பணியை பொதுமக்களும் பொது அமைப்புகளும் அவசரமாக மேற்கொள்ள வேண்டும்.

பொதுவில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்த நிலையிலும் எங்கு செல்வது? என்ன செய்வது? என்ற மனக்கிலேசத்துடன் வீடுகளுக்குள் இருக்கின்றவர்களும் உள்ளனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

எனவே உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்களின் நிலைமை எவ்வாறாக உள்ளது என்பதை அறிந்து தேவையானவர்களுக்கு உதவி வழங்குவது காலத்தால் செய்கின்ற பேருதவியாகும்.

தவிர, வெள்ளத்தால் அதிகளவு பாதிக்கப்படக் கூடியவர்கள் சிறுவர்களும் முதியவர்களுமாவர்.

எனவே அவர்களுக்குத் தேவையான உடுபுடவைகள், போர்வைகள் போன்றவற்றை வழங்குவதும் பயன்மிக்கதாகும்.

இவை பொதுமக்களதும் பொது அமைப்புகளதும் தலையாய கடமையாக இருக்க, அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கும் முக்கிய பணிகள் உண்டு.

அந்த வகையில் வீதிகளிலும் வீடுகளி லும் பெரு வெள்ளம் சூழ்ந்திருக்க, வீட்டை விட்டு வெளியேறுவது எங்ஙனம் என ஏங்கிக் கொண்டிருக்கும் முதியவர்கள், நோயாளர்கள், விசேட தேவையுடையவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களை பாதுகாப்பாக வெளியேற்றி உரிய இடங்களில் தங்கவைப்பதற்கான வாகன வசதிகளை வழங்குவது மற்றும் பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், குடிசைக் கைத்தொழில் செய்வோர், நாளாந்த தொழில் புரிவோர் என யாரெல்லாம் வெள்ள அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டனரோ அவர்களுக்கெல்லாம் இழப்பீடுகளை வழங்குவதற்கு அரச நிர்வாகத்தினூடாக ஏற்பாடுகளைச் செய்வதும் அவசியமாகும்.

# புரேவி சூறாவளியால் ஏற்பட்டுள்ள சேத விபரங்களை திரட்டுங்கள்

### யாழ். அரச அதிபர் பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் புரேவி சூறாவளி காரணமாக ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் நிவர் மற்றும் புரேவி சூறாவளிகள் காரணமாக யாழ். மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, பாடசாலைகளில் அமைந்துள்ள தற்காலிக முகாம்களில் தங்கியிருக்கும் மக்களைப் பாதுகாப்பான வேறு இடங்களுக்கு மாற்றி, பாடசாலைகளை மீளத் தொடங்குதல், பாதிக்கப்பட்டவர்களுக்குச் சமைத்த உணவுவழங்குதல்ஆகிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

அத்தோடு, பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு நிலையை மீளக்கட்டியெழுப்பும் நோக்கோடு பல்வேறு தொழிற்துறைகளிலும் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு அரச அதிபர், பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

மீன்பிடித்துறை, சிறு கைத்தொழில் முயற்சிகள் மற்றும் விவசாயத் துறைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள், பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள், கல்வித்துறை, சுகாதாரத்துறை, மின்சாரத்துறை உள்ளிட்ட பல்வேறுபட்ட கட்டமைப்புக்களிலும் ஏற்பட்டுள்ள சேதங்கள் உள்ளிட்ட தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் அறிவுறுத்தினார்.

பிரதேச செயலாளர்களின் அறிக்கைகளின் அடிப்படையிலேயே பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடல் அரிப்பு மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் பாதிப்புகளை எதிர்காலத்தில் தடுப்பதற்கும், வடிகாலமைப்புக் கட்டமைப்புகளை மீளச் சீரமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ். மாநகர மேயர் இ.ஆர்னல்ட், மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜா, பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சுகாதாரத் துறையினர், இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் உள்ளிட்ட பல தரப்பினரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(ஞா-181, 101)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குளுமாட்டு சந்தி, புதியசின்னக்குளம் கிராமம், இராஜேந்திரகுளம் கிராமம், சூடுவெந்தபுலவு கிராமம் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடு
16 Days of Activism Against Gender Based Violence- 2020
JSAC
ஊடகங்களே உங்கள் ஊதியத்திற்காய் பெண்களை ஊனமாக்காமல் ஊர் புகழ்ந்திட உத்தமமான கருத்துக்களால் ஊக்கம் கொடுத்திடுவீர் பெண்ணியம் வாழ
யாழ்.சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center
ஊடக அனுசரணை: வலம்புரி

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## நல்ல குடும்பம்



ஒரு குடும்பம் நல்ல குடும்பமாக திகழ சில அவசியமான அறிவுரைகளை கூறுகிறார் வேதாத்திரி மகரிஷி. அந்த அறிவுரைகள்.

1.நாம் பெற்ற ஞானத்தைப் பயன்படுத்த வேண்டிய இடம் நம் குடும்பமே.

2.கணவன்-மனைவி உறவுக்கு இணையாக உலகில் வேறெந்த உறவையும் சொல்ல முடியாது.

3.குடும்ப நிர்வாகம் செய்வது உங்கள் அறிவாகத்தான் இருக்க வேண்டும். எந்தநிலையிலும் உணர்ச்சிகள் நிர்வாகம் செய்யக் கூடாது.

4.வரவுக்குள் செலவை நிறுத்துங்கள். அது குடும்ப அமைதியைக் காக்கும். வீண் செலவுகள் செய்ய வேண்டாம். அது குடும்ப அமைதியை சீர்குலைக்கும்.

5. ஒரு குடும்பத்தில் உள்ள எல்லோருக்கும் பொருளீட்டும் திறன் வேண்டும். அல்லது, பெரும்பாலானோர் பொருளீட்டும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். சிலர் அதிகமாக சம்பாதிக்கலாம். சிலர் குறைவாக சம்பாதிக்கலாம். எப்படி இருந்தாலும் அதை காப்பது, கவர்வது, பிறருக்கு இடுவது ஆகிய செயல்களில் சமமான பொறுப்பு வேண்டும்.

6. கணவனுக்குத் தெரியாமல் மனைவியோ, மனைவிக்குத் தெரியாமல் கணவனோ சம்பாதிப்பதும், செலவு செய்வதும், சேமிப்பதும் சரியாக இருக்காது. அது பிரச்சினைகளுக்கு இடம் தரும். மனதில் ஒளிவு மறைவு வைத்துக்கொண்டிருந்தால் தெய்வீக உறவு இருக்காது.

7. குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டும் என்றால் சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் ஆகிய ஒன்றையும் கடைப்பிடித்து வரவேண்டும்.


8. பிறர் குற்றத்தைப் பெரிதுபடுத்தாமல் பொறுத்தலும், மறத்தலும் அமைதிக்கு வழி வகுக்கும்.

9. தனக்கு கிடைத்த வாழ்க்கைத் துணையைப் பற்றி யாரும் குறை கொள்ளத் தேவையில்லை. அவரவர் அடிமனமே இதை தேர்ந்தெடுத்துக் கொள்ளும்.

10. நல்ல குடும்பத்தில் நன்மக்கள் தழைப்பார்கள். பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கும் குடும்ப அமைதி அவசியம்.

# எல்.பி.எல். போட்டியில் திறமையைக் காட்டும் யாழ்.வீரர்கள்

## முரளிதரன் புகழாரம்



இலங்கை கிரிக்கெட் அணியில் இதுவரை வடக்கு- கிழக்கை சேர்ந்த வீரர்கள் இணைத்துக் கொள்ளப்படாமைக்கு அரசியல் காரணங்கள் கிடையாது.

போதிய திறமையின்மை தான் காரணம். இப் போது அந்த நிலைமை மாற ஆரம்பித்திருக்கிறது என இலங்கை கிரிக்கெட் முன்னாள் சுழற்பந்து வீரர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக தமிழர்களே உள்ளனர். யுத்தம் காரணமாக 30 வருடங்களாக அங்கு கிரிக்கெட் விளையாடப்படவில்லை. யுத்தத்திற்கு முதல் பலர் விளையாடியிருப்பார்கள். ஆனால்அப்போது இலங்கை டெஸ்ட் அந்தஸ்தை பெற்றிருக்காததால் அவர்களிற்கு வாய்ப்பு கிடைக்காமல் விருந்திருக்கலாம். பயிற்சி வசதிகள் அங்கு குறைவாக இருந்தது.

வீரர்கள் திறமையை காட்டினாலும், நாட்டின் தெற்கு, மத்திய பகுதி வீரர்களை விட குறைவாக இருந்தமையினாலேயே அவர்களிற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

எப்போதும் இந்த நிலைமை இருக்காது. இப்போது அந்த பகுதிகளில் வசதிகள் வழங்கப்படுகிறது. இப்போது எல்.பி.எல் தொடரில் யாழ்ப்பாண அணியில் சில வீரர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சிறப்பாக விளையாடுகிறார்கள் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# முதலாவது டெஸ்ட்டில் நியூசிலாந்து அணி வெற்றி




மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 134 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

ஹெமில்டன்- சீடன் கார்டன் மைதானத்தில் கடந்த 3 ஆம் திகதி ஆரம்பமான இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணி, அணித் தலைவர் கேன் வில்லியம்சனின் இரட்டைச் சதத்தின் உதவியுடன் 7 விக்கெட்டுகளை இழந்து 519 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை இடை நிறுத்தியது.

அவ்வணி சார்பாக கேன் வில்லியம்சன் 251 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக கெமார் ரோச் மற்றும் செனோன் கெப்ரியல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதன் பின்னர் பதிலுக்கு களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 64 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 138 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதன்பிறகு 381 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியை போலோ ஒன் முறையில் துடுப்பெடுத்தாட நியூசிலாந்து அணி அழைத்தது.

அதன்படி மீண்டும் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 58.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 247 ஓட்டங்களை மட்டுமே பெற்று 134 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

அவ்வணி சார்பாக ஜெர்மைன் பிளாக்வுட் 104 ஓட்டங்களையும் அல்சாரி ஜோசப் 86 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக நீல் வோக்னர் 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

இந்த போட்டியின் ஆட்ட நாயகனாக இரட்டைச் சதம் அடித்த நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

## லங்கா பிரீமியர் லீக்

# கொழும்பு அணி அபார வெற்றி



லங்கா பிரீமியர் லீக் தொடரின் 13ஆவது போட்டியில் கொழும்பு கிங்ஸ் அணி ஏழு விக்கெட்டுகளால் கண்டி டஸ்கர்ஸ் அணியை வீழ்த்தி யுள்ளது.

இந்தப்போட்டி, அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இப்போட்டியில், நாணயச் சுழற்சியில். வெற்றிபெற்ற கண்டி டஸ்கர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர் மானித்தது.

இதன்படி, களமிறங்கிய கண்டி அணி 19.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 105 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

அணிசார்பாக, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ரஹ்மானுல்லா குர்பஷ் அதிகபட்சமாக 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில், ரி.டி.சில்வா, பிரியஞ்சன் மற்றும் ஹைஸ் அஹமட் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் மத்தியூஸ், சமீர மற்றும் ரஸ்ஸெல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்நிலையில், பதிலுக்கு 106 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய கொழும்பு அணி, 14.1 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டினேஸ் சன்டிமல் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் பிரியஞ்சன் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில், முனாப் பட்டேல், விஸ்வா பெர்னாண்டோ மற்றும் நுவான் பிரதீப் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக சமீர தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப் போட்டியின் வெற்றியுடன் கொழும்பு அணி, இதுவரை நடைபெற்ற ஐந்து போட்டிகளில் நான்கில் வெற்றிபெற்று ஐந்து அணிகளின் பட்டியலில் எட்டுப் புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதேவேளை, கண்டி டஸ்கர்ஸ் அணி இதுவரை விளையாடிய ஆறு போட்டிகளில் ஒன்றில் மாத்திரம் வெற்றிபெற்று நான்காவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேசிய ரி-20 லீக் தொடர் பெப்ரவரியில்



லங்கா பிரீமியர் லீக் இருபதுக்கு- 20 கிரிக்கெட் தொடரானது தற்போது வெற்றிகரமாக நடைபெற்று வருவதனால், 2021 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தேசிய ரி-10 லீக்கை நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் தீர்மானம் மேற்கொண்டுள்ளது. அதன்படி இத் தொடரை பெப்ரவரி 1-12 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் தீர்மானித்துள்ளது. தொடரில் பங்கேற்கும் அணிகளின் உரிமைகள் தொடர்பான டெண்டர்களுக்கு எஸ்.எல்.சி ஏற்கனவே அழைப்பு விடுத்துள்ளது. போட்டியின் விபரங்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்றாலும் பெப்ரவரியில் தொடரை நடத்த முடியும் என்று இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் நம்பிக்கை கொண்டுள்ளது. (ஐ)

# பட்மின்டன் வீரர்கள் நால்வருக்கு கொரோனா

சாய்னாவின் கணவர் உட்பட 4 பட்மின்டன் வீரர்களுக்கு நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனையில் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது.

இந்திய பட்மின்டன் வீரர்களான காஷ்யப், எச்.எஸ். பிரனாய், குருசாய் தத், பிரணாவ் ஜெர்ரி சோப்ரா ஆகியோர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தங்களை கொரோனாப் பரிசோதனைக்குட் படுத்திக் கொண்டனர். இதில் இவர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியாகி இருக்கிறது.

முன்னாள் கொமன்வெல்த் விளையாட்டு சம்பியனான காஷ்யப், பிரபல பட்மின்டன் வீராங்கனை சாய்னா நேவாலின் கணவர் ஆவார். சாய்னாவுக்கு நடத்தப்பட்ட சோதனையில் அவருக்கு பாதிப்பு இல்லை என்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். காஷ்யப் உள்ளிட்டோர் அண்மையில் ஒரு திருமண விழாவில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாயமான...

பேராறு நீர்த்தேக்கத்தை பார்வையிடு வதற்காக வவுனியா விபுலாநந்தாக் கல்லூரி மாணவன் தி. தனுசன் நண்பர்களு டன் சென்றிருந்தார்.

இந்நிலையில் நீரில் இழுத்துச் செல்லப் பட்ட குறித்த மாணவன் பலத்த தேடுத லின் போதும் கண்டு பிடிக்கப்படாத நிலை யில் நேற்றுக் காலை சடலம் நீரப்பகுதியில் மிதந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது. (ஞா-250,299)

## பாடசாலை...

வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அறி வித்துள்ளார்.

சீரற்ற காலநிலை தொடர்பாக கல்வி அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட கலந்துரை யாடலின் பின் இந்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ஞா)

## இளைஞனுக்கு...

காணப்பட்டு 11ஆவது நாள் பெறப்பட்ட பிசிஆர் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட போதே இளைஞனுக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஞா-100,312)

## முதியவருக்கு...

துள்ளார்.

புலோலியை சேர்ந்த வயோதிபர் ஒருவர் திடீர் நெஞ்சு வலியினால் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலை யில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந் தார்.

குறித்த முதியவருக்கு கொரோனா தொற்று என வதந்தி பரவிய நிலையில் பருத்தித்துறை மக்கள் அச்சமடைந்தனர்.

எனினும் அவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என பணிப் பாளர் கூறியுள்ளார். (ஞா-18)

## மூவருக்கு...

தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை 292 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர் களில் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர் களில் ஏனையவர்களுக்குத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-18)

## மக்களின்...

ர்த்த நிலை தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஒன்று மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரிவின் ஏற்பாட்டில் மாவட்ட அர சாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தலைமையில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் குறித்த கூட்டம் இடம் பெற்றது.

கூட்டம் தொடர்பில் அரசாங்க அதிபர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் புரேவி புயல் ஏற்படுத்திய தாக்கம் குறித்து அதனு டைய தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்கும் அதேபோல் இயல்பு நிலையை மீள கட்டி யெழுப்புதல், நிவாரண நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக நேற்று ஒரு அவசர கலந்துரையாடல் ஒன்று மாவட்ட செயல கத்தில் இடம்பெற்றது.

குறிப்பாக நீர் வழிந்து ஓடத நிலைமை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படு கின்றது. இதற்கு உள்ளூராட்சி சபை முயற்சி எடுத்தும் அதற்கும் பொதுமக் களின் ஒத்துழைப்பின்மை காரணமாக மக்களின் சமூக அக்கறையற்ற செயற்பாடு காரணமாக இந்நிலைமை ஏற்பட்டிருப்பது இங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பொதுமக்கள் உள்ளூர் அதிகார சபை யினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண் டும். கழிவுப்பொருட்களை வீசுதல், வடி கால்களை மூடுதல் அல்லது தேவையற்ற பொருட்களை பொது இடங்களில் வீசுதல் போன்ற செயற்பாட்டை மேற்கொள்ளும் காரணத்தினாலும் வடிகால்களை சட்ட விரோதமாக தடுப்பதும் வெள்ள நீர் தேங்கும் அவல நிலை ஏற்படுகின்றது.

இந்த விடயத்தில் யாழ்.மாநகர சபை மற்றும் மாநகர உத்தியோகத்தர்கள் இடர் ஏற்பட்ட பகுதிகளில் அதனை செயற்படுத் தியதை காணக் கூடியதாக இருந்தது.

இயற்கையாக வெள்ளநீர் வழிந்தோட கூடிய வடிகால்களையும் அதேபோல் வீதிகளை அமைக்கும் போதும் விசேட கவனம் எடுத்து அதை பராமரிப்பதற்கும் வெள்ள வாய்க்கால் மூடப்படாது அவற் றைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ்.மாநகர சபை இந்த விடயங் களை தொடர்ச்சியாக மேற்கொள்ளும் போது வெள்ள நிலைமையை சமாளிக்க கூடியதாக இருக்கும் என்றார். (ஞா-18,101)

## யாழில் நேற்றும்...

கிறது.

கொக்குவில், கோண்டாவில், தாவடி, நல்லூர், கல்வியங்காடு, சாவகச்சேரி உட்பட்ட பகுதிகளிலும் கடும் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. சில பகுதி களில் இருந்து மக்கள் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றிருக்கின்றனர்.

தீவிர மழை பெய்வதற்கான காலநிலை தொடர்ந்தும் காணப்பட்டு வருகின்ற நிலை யில் மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. (ஞா)

## வடக்கு மாகாண...

பகுதிகளில் உள்ள மக்கள் மிகுந்த அவ தானத்துடன் இருப்பது சிறந்தது என அவர் மேலும் கூறியுள்ளார். (ஞா)

## 3 பேர் பலி...

கிழமை கோவிட் - 19 நோயால் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 140ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று உயிரிழந்தவர்களில் கொழும்பு கோட்டையைச் சேர்ந்த 98 வயதுடைய ஆண் ஒருவரும் ஹுகத்துடுவையைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவரும் மக் கோணாவைச் சேர்ந்த 71 வயதுடைய ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் நேற்று +686 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.

நாட்டில் ஜனவரிமாதம் முதல் நேற்றுவரை 27 ஆயிரத்து 876 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஞா)

## யாழ்.,கிளிநொச்சி...

களம் மக்களை அவதானமாக இருக்கு மாறு அறிவுறுத்தியுள்ளது.

பொதுவாக வடமாகாணம் முழுவதும் மழை வீழ்ச்சி பதிவாகும் என கூறி யிருக்கும் வளி மண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ள பகுதிகளில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகும் எனவும் பொதுமக் கள் இடி மின்னல் மற்றும் பலமான காற்று குறித்து அவதானமாக இருக்குமாறு அறி வுறுத்தப்பட்டிருக் கின்றது. (ஞா)

## கைதி...

அழைத்து வரப்பட் டுள்ளனர்.

கொரோனாத் தொற்று சிறைச் சாலைகளில் சடுதி யாக அதிகரித்து வரும் நிலையில் நேற்று அவர்கள் அழைத்து வரப்பட் டுள்ளனர்.

மகர சிறைச் சாலை, கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை, மக சீன் சிறைச்சாலை, நீர்கொழும்பு சிறைச் சாலை, கேகாலை சிறைச்சாலை, அநுராதபுரம் சிறைச் சாலை ஆகிய சிறைச் சாலைகளில் இரு ந்தே அவர்கள் அழைத்து வரப்பட் டிருப்பதாக தெரிய வருகின்றது.

கைதிகள் 181 பேர் அழைத்து வரப் பட்டுள்ளனர். அவர்கள் இயக்கச்சி இராணு வத்தினரின் தனிமைப்படுத்தல் நிலையத் தில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத் தப்பட்டு கண்காணிக்கப்படவுள்ளனர். (ஞா)

## வெள்ள அனர்த்தம் 75 ஆயிரம் பேர் யாழில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது வரை 22620 குடும்பங்களைச் சேர்ந்த 74995 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத் துவ பிரிவின் உதவி பணிப்பாளர் ரீ.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது,

இதுவரை நான்கு நபர்கள் உயிரி ழந்துள்ளனர். அதேவேளை 6 பேர் காயமடைந்துள்ளனர். அத்தோடு யாழ்.மாவட்டத்தில் தற்போது 21 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப் பட்டு 358 குடும்பங்களைச் சேர்ந்த 1340 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளார் கள்.

தொடர்ந்து பெய்து வரும் மழை யாலும் சில தினங்களுக்கு முன் ஏற் பட்ட சூறாவளியாலும் இவ்வாறான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் 93 வீடுகள் முழுமையாக வும், 2969 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளதாகவும் ரீ.என். சூரியராஜா தெரிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ஞா)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1636 திகதி 2020.12.06
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 02 08 19 67

மெகா பவர்
திகதி 06/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0695
J 18 12 24 59 64

மஹஜன சம்பத
திகதி 2020/12/06
சீட்டிழுப்பு இலக்கம் 4328
X 7 6 5 5 4 6

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 06.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2623
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 01 26 27 62

தன நிதானய
திகதி - 2020.12.06
சீட்டிழுப்பு இலக்கம் - 365
I 14 20 21 40

அத கோடிபதி
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1124
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 06.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 88,686,960
வெற்றி இலக்கங்கள் 53 57 63 64 ஆங்கில எழுத்து I

சனிதா
கிழமை: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3454
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 06.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,850,291
வெற்றி இலக்கங்கள் 01 32 69 70 D

ராசி
சுப்பர் ஜக்பொட் 5,300,863/=
திகதி : 06.12.2020
வெற்றி வாரம் : 3005
வர்ணம் : ஊதா
வெற்றி இலக்கங்கள் 32 42 47 49 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 70,17,400

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1298 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 06/12/2020 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் O 12 31 45 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் 56,663,301

ஜய
660
06.12 2020
W 04 33 44 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,241,410
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## சிக்கல் ஏற்பட்டுள்ள பகுதிகளில்
# ஊரடங்கு அமுல்படுத்தாவிட்டால் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது
## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

அட்டலுகமவைப் போன்று வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ள பகுதிகளிலும் மக்களின் ஒத்துழைப்பு குறைவாகக் காணப்படுகின்ற பகுதிகளிலும் தனிமைப்படுத்தல் என்பதைத் தாண்டி குறுகிய காலத்திற்கு பொலிஸ் ஊரடங்கு சட்டத்தை அமுல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகா ரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு முழு நாட்டிலுமுள்ள மொத்த தொற்றாளர்களில் 30 வீதத்திற்கு அதிகமானோர் கொழும்பு மாநகரசபைக் குட்பட்ட பகுதிகளில் உள்ளனர். இதிலிருந்து இங்கு பாரிய அவதானம் காணப்படுவதாகவும் அந்த சங்கம் எச்சரித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத் தியர் ஹரித அலுத்கே இதனை வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில், ஆரம்பத்தில் அபாயமற்ற பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்ட மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களில் கூட தற்போது தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். கிழக்கில் சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று, புத்தளத்தில் சில பகுதிகள், இரத்தினபுரி, மத்திய மாகாணத்தில் கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்படுவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

முழு நாட்டிலுமுள்ள மொத்த தொற்றாளர்களில் 30 வீதத்திற்கு அதிகமானோர் கொழும்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ளனர். இதிலிருந்து இங்கு பாரிய அவதானம் காணப்படுகிறது என்பது தெளிவாகிறது. இவ்வாறு கொழும்பில் காணப்படுகின்ற அபாயத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கும் அதேவேளை, புதிதாக பண்டாரகம - அட்டலுகம பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள பரவலைக் கட்டுப்படுத்துவதுமாகும்.

அவ்வாறு செய்தால் மாத்திரமே தொற்றாளர்கள் குறித்து பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் பிரதேச மருத்துவ அதிகாரிகளுக்கு முறையான தீர்மானங்களை எடுக்க முடியும். அவ்வாறில்லை என்றால் பரவல் எந்தளவிற்கு தீவிரமடையும் என கூறமுடியாது என்றார். (ஞா)

## கிளிநொச்சியில் கடும் மழை

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று பிற்பகல் பெய்த கனத்த மழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது.

பாரதிபுரம் உள்ளிட்ட பல பகுதிகளில் இவ்வாறு வெள்ளம் சூழ்ந்து உள்ளது. தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் குளங்களின் நீர்மட்டம் மேலும் அதிகரித்துள்ளது.

கனகாம்பிகை குளம் வான்பாய்வதால் அதிக நீர் வெளியாகிறது. இதனால் கனகாம்பிகைக் குளம், இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு, உமையாள் புரம் பகுதி மக்கள் அவதானமாக இருக்குமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (ஞா-100,312)

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 - 01 - 1948



இறப்பு 05 - 12 - 2020

### திருமதி யோகேஸ்வரி பூபாலசிங்கம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி பூபாலசிங்கம் நேற்றுமுன்தினம் (05.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சட்டநாதர் - பரமேஸ்வரி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற முத்துக்குமாரு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் பூபாலசிங்கத்தின் ( ஓய்வுபெற்ற இ.போ.ச ஊழியர்) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், ஆனந்தேஸ்வரி மற்றும் செந்தில்நாதன், தனேஸ்வரி, இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரநாதன் ஆகியோரின் சகோதரியும் பிரணவன், கிருபாலினி (அம்பிகா) ஆகியோரின் தாயாரும் கிருஸ்ணகுமார், வானதி ஆகியோரின் மாமியாரும் தனுசாந், சுபாங்கி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2020) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 11.30 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-850)

இல. 310, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 697 7920
தகவல்:-
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.


**வாடகைக்கு இடம் தேவை**

யாழ். நகரை அண்மித்த பகுதியில்
சிறிய நிறுவனம் ஒன்றிற்கு
முற்பணம் இல்லாமல் இடம் தேவை.
(4864)
**076 300 5506**

**காணி தேவை**

நாவலர் வீதி, பிறவுண் வீதி, மனோகரா
சந்தியினை அண்மித்த பிரதேசத்தில்
A/L பிரிவிற்குரிய தனியார் கல்வி நிறுவனம்
அமைப்பதற்கு உகந்த காணி
வாடகைக்குத் தேவை.
(4869)
தொடர்புகளுக்கு : Ka. Subeesan
**077 430 7829, 076 236 3470**

மீண்டும்

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
**100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-785)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK- 1025/= Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-735)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ராசபாத வீதி, பிரதான வீதி
உடன் மேட்டு நிலம் 6 1/4 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(ராச வீதி சந்தியில் இருந்து 300M தூரம் பிரதான வீதியுடன். )
(4870)
**077 623 4204, 077 288 0152**

**Physics Zoom Classes**

Past Paper Class ( 1979 - 2020 )
2K21 & 2K22 - Mechanics
Mon - Friday 9.15 p.m
2021 July இற்கு முன்னதாக அனைத்து
அலகுகளும் முற்றுப்பெறும்.

Repeat Batch - Mechanics
Mon - Friday 12.00 - 1.30 p.m

2022 - ஒலியியல்
செவ்வாய், வெள்ளி, சனி
8.00 - 9.00 p.m

2021 - வெப்பவியல்
திங்கள், வியாழன்
8.00 - 9.15 p.m

நாட்டின் எப்பாகத்தில் இருந்தும் இணைய விரும்பும்
மாணவர்கள் மேலதிக விபரங்களை பெற New எனக்
குறிப்பிட்டு விபரங்களை Telegram ஊடாக அனுப்பவும்.
T.U.JIINTHU
(4861)
GOLDEN SCIENCE ACADEMY
Navalar Road - Jaffna.
**077 603 4895**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.